VASANTHAM Tamil Monthly 2 - 1 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

முதலாண்டு சிறப்பிதழ்!

மாத இதழ்

AR-RABAE




மே 2008

வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்!

May 2008

## நீங்கா ஒளியாய்... நேர்வழியாய்... ஏகத்துவ வாழ்க்கை!





IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

கறைவாழ்வை நிறைவாக்கும்
இறையச்சம்!

# வசந்தம்



## முதலாண்டு நிறைவு!

வசந்த பனிச்சாறல்களில்
பன்னிரு மாதங்கள் முக்குளித்து,
நவவிடியல்களில் தலைதுவட்டிக்கொண்டோம்!
அவ்விடியல்களின் செங்கீற்றுக்கதிர்கள்,
எத்திங்களும் நம் இதயங்களில் உதித்து,
எம் உள்ளங்களை உவகை கொள்ளச் செய்யட்டும்!
அதற்கு, இறையருள் துணை நிற்கட்டும்!!

என் இறைவனே! நீ என்னை எங்கு கொண்டு சென்றாலும் உண்மையுடன் கொண்டு செல்வாயாக! என்னை எங்கிருந்து வெளியேற்றினாலும் உண்மையுடன் வெளியேற்றுவாயாக! உன் தரப்பிலிருந்து எனக்குப் பக்கபலமாக ஓர் அதிகாரத்தை வழங்குவாயாக!

-திருக்குர்ஆன் 17:80

வசந்தம்
முதலாண்டு சிறப்பிதழ்
மாத இதழ்
வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!



VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
May 2008
மே ௨௦௦௮
மலர் ௨ இதழ் ١

**CHIEF PATRON**
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari

**EDITOR**
ஆசிரியர்
M.A. Abdul Musavir

**EDITORIAL BOARD**
N.M.M. Hussain
Ameer Hasan Nainar
Faizal Muhammad
Muhammad Jabir
Farzana Rafeeq
Zinoofa Ansar

**DESIGN**
வண்ண உருவரைபடம்
Nader Bellal
IT Section-IPC

**PUBLISH**
வெளியீடு
IPC
KUWAIT

**CONTACTS**
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT

**DIAL**
2444116, 2444117 Extn: 208

**FAX**
2400057
Attn: IPC—VASANTHAM

**e-MAIL**
amusavir@gmail.com

**WEBSITE**
www.ipc-kw.com

## இயக்குநரிடமிருந்து



அஷ்ஷேக் காலித் அல்-ஸபா
இயக்குநர்
அழைப்புப்பணித் துறை
இஸ்லாமிய நிலையம் - IPC, குவைத்

# வசந்தத்துக்குள் சுகந்தம் வீசும் ஏகாந்தங்கள்!

அன்புள்ள வசந்த, வாசகர்களே!

எமது இந்த வசந்த புதல்வி இத்திங்களில் ஒரு வயதைப் பூர்த்தி செய்கின்றாள்! இந்த பெருஉவகையான உற்சவ நாளில் எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்!

இன்றைய நவீன விஞ்ஞான-தொழில்நுட்ப உலகில் விஷயங்கள் மக்களை விரைவாக சென்றடையச் செய்வதில் செய்தி ஊடகங்களுக்கு பெரும் பங்கு இருப்பது மறுக்க முடியாத உண்மை! இதனை கருத்தில் கொண்டு, வாசிப்பு ஆர்வம் கொண்ட தமிழ் மக்கள் இறைசெய்தியின் உன்னத முக்கியத்துவத்தை உணர்ந்து சத்திய ஒளியை அறிந்துகொள்ளும் வண்ணம், வசந்தம் கடந்த ஒரு வருடமாக உங்களிடையே நற்சேவை ஆற்றி வருகின்றது என்பது தாங்கள் அறிந்ததே! இறைவன் நாடினால், இனிவரும் காலங்களிலும், வசந்தம் மென்மேலும் அழகிய படைப்புக்களை தந்து கொண்டிருக்கும்!

திண்ணமாக, வசந்தத்துடனான உங்களுடைய தொடர்பும், ஆக்கபூர்வ ஒத்துழைப்புமே அதன் வளர்ச்சிக்கும், சிறந்த படைப்புக்கள் வழங்கி உங்களுக்குப் பெரும்பயன் ஆற்றுவதற்கும் அழகிய தூண்டுகோலாக அமையும் என்பதில் கிஞ்சுற்றும் ஐயமில்லை! இதுவிஷயத்தில் எமது இந்த சஞ்சிகை உங்களிடத்தில் பெரும் ஆவலையும், ஆதரவையும் எதிர்பார்க்கின்றது. ஏனெனில், வசந்தம் - உங்களுடைய குரலாக, குவைத்வாழ் தமிழ் மக்களின் நாதமாக விளங்குகின்றது. அதற்கு காரணமான, ஏகஇறைவனுக்கும் அடுத்தபடியாக வாசகர்களான உங்களுக்கும் இப்பொன்னான தருணத்தில் நன்றிகளை உரித்தாக்குவதில் உவகையடைகின்றோம்!

வசந்தத்துக்குள் சுகந்தம் வீசும் ஏகாந்தங்களாய் அதன் படைப்புக்கள் இறையுதவியுடன் நிச்சயம் உங்கள் வாழ்வுக்கு வல்லிய வழித்தடங்களாய் அமைந்தது.....!அமைந்துகொண்டிருக்கின்றது!!...அமையும்!!!.. என நம்புகின்றோம்

மேலும், இந்த மாபெரும் இறைபணியில், பின்பலமாக இருந்து பணியாற்றும் ஆசிரியருக்கும், பக்கபலமாக இருக்கும் ஆசிரியகுழுமத்தினருக்கும் - நல்ஆக்கங்கள் படைத்து வசந்த தாரகையை பத்திரிகை வானில் மின்னச் செய்துகொண்டிருக்கும் எழுத்தாள சகோதர-சகோதரிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!

வாழ்த்துங்கள், வளருகின்றோம்! பிரார்த்தியுங்கள்! உங்கள் பிரார்த்தனை கூட எம் வசந்த சஞ்சிகையை பின்புலமாக நின்று புளங்காங்கிதம் அடையச்செய்யும்!! புது விதமாய் மெருகேற்றச்செய்யும். இறைவன் அருள் பாலிக்கட்டும்!



# இந்த இதழில்..!


3 ஆசிரியரிடமிருந்து...!
வசந்த எண்ணலினூடே
வானவியல் வண்ணங்கள்!

6 முகப்புக் கட்டுரை
நீங்கா ஒளியாய்..
நேர்வழியாய்... ஏகத்துவ வாழ்க்கை!

14 கவிதை - அன்னையர் தினம்
தாயே..!

15 முஸ்லிம் பெண்: படித்தரங்கள்
செல்வத்தின் மாயையா?
மார்க்கத்தின் மேன்மையா?

4 வாசகர் சுகந்தங்கள்
மனிதவாழ்வின்
வெற்றிமழைத் தூறல்கள்!

11 வாழ்க்கை
இஸ்லாமிய திண்மைத் தழுவல்கள்

12 IPC-வழித்தடங்கள்
தலைமையகம்,ரவ்தா,சால்மியா

16 திருக்குர்ஆன்
முஸ்லிம்களுக்கு மட்டும்
சொந்தமானவனா, நான்?

17 கவிதை - அன்னையர் தினம்
தாயே..!

18 பண்புநலன்
கறைவாழ்வை நிறைவாக்கும்
இறையச்சம்!

5 அண்ணலார் (ஸல்)
எச்சரிக்க வந்த ஏந்தல்!

8 விருந்தினர் பக்கம்
மனிதன் என்றுமே சிறந்த மொடல்!

9 விருந்தினர் பக்கம்
சந்தேகக்கோடு அது சந்தோஷக்கேடு!

19 போட்டி
அறிவுக் குறுக்கெழுத்து


20 கடைசிப்பக்கம்
இறைநியதியே நிரந்தரம்..!
மனித சித்தாந்தம் எம்மாத்திரம்..?




6



14



15




18


- رسالة من الشئون الدعوية - رسالة من مدير التحرير - هذا هو الإسلام
هل محمد ﷺ إله المسلمين - إياكم والظن - الصراط المستقيم - في ظلال
الحقيقة - أنشطة اللجنة - انشودة أمي - هل القرآن كلمة إلهية - خير الآمم -
التقوى - مسابقة- الشيوعية تضاد الإسلام

முதலாண்டு சிறப்பிதழ்

# வசந்த என்னலினூடே வானவியல் வண்ணங்கள்!



அன்றைய தினம் - பசுமை போர்த்தி, இன்னும் நிழலாடிக்கொண்டிருக்கிறது என் இதய வெளியில்!

ஆம், 2001 ஆம் ஆண்டின் ஆரம்பம் அது! இஸ்லாமிய நிலையம் IPC-இன் இன்றைய துணைப் பொது மேலாளரும் முக்கியப் பொறுப்பாளருமான அஷ்ஷேக் ஜமால் நாஸர்-அல்- ஷத்தி இந்தியாவுக்கு வந்திருந்த நேரம்! சென்னையில் நடந்த அழைப்புப்பணி குறித்த கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றினார். குவைத்தில் IPC-இன் பணிகள் பற்றி பெரிதும் விவரித்தார். அப்போது செய்தி ஊடகங்களின் அபரிமித வளர்ச்சியையும், ஆசிய மக்களின் வாசிக்கும் பழக்கத்தையும் கருத்திற்கொண்டு, வரும் காலங்களில் IPC, ஒவ்வொரு பிராந்திய மொழிகளிலும் குவைத்திலிருந்து புதிய சஞ்சிகைகள் வெளியிட திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அந்தக் கனவுத்திட்டம் 2006 ஆம் ஆண்டு தெலுகு மொழியில் நளவன்கா மாதாந்திரியை கொண்டு வந்ததன் மூலம் நனவாகியது. அதன் பிறகு 2007, மே மாதம் முதல் -சத்தியப் பேரொளியை தமிழ் கூறும் நல்லுலகுக்கு சாதி, மத, இன, நாடு வேறுபாடின்றி எத்தி வைக்கும் உன்னதக் குறிக்கோளுடன் தமிழ்ப்பத்திரிகை உலகில் வசந்தம் வலம் வர ஆரம்பித்தது.

'வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்..!' எனும் சித்தாந்தக் கொள்கையுடன் காலாண்டு சஞ்சிகையாக முதலில் வெளிவந்து, பின் வாசகர்களின் கருத்தோங்கல் மிகைக்கவே, தன் மூன்றாவது இதழுடனே மாத மலரானது. வல்ல இறைவனின் பேரருளுக்கு அடுத்து, குவைத் வாழ் இந்திய - இலங்கை சார் தமிழ் வாசகர்களின் வாஞ்சைமிகு ஒத்துழைப்பே இதன் வளர்ச்சிக்கு மைல்கல் என்பதற்கு மறுவாதமில்லை. ஆம்.,வாசகர் கருத்துக்களே துணைக்கருக்கள் இதற்கு!

ஒரு வயது கண்ட வசந்தத்தின் வெற்றிக்கு பின்புலம் ஒருவரின் கைவண்ணமல்ல என்பது திண்ணமே! மாறாக, ஆசிரியக் குழுமத்தினர், பேனா முனை பற்றும் எழுத்தாளர்கள் ஆகியோரின் பூரண ஆதரவுக்கரங்களே வசந்த வெற்றியின் சுரங்கள், ஆம்..,நல்லுரங்கள்.

முதலாண்டு சிறப்பிதழாக வெளிவரும் இவ்விதழில், குவைத்தின் புகழ்பெற்ற இஸ்லாமிய சிந்தனையாளர் டாக்டர் அஷ் ஷேக் தப்தபாஈ அவர்களின் சிந்தனைச்சிதறல்கள் முகப்புக்கட்டுரையாக வீற்றிருக்கிறது. அறிவார்ந்த தொடர்களை செதுக்கி, அழியா, அணையா கருத்துக்களை கோர்த்துத்தரும் எமது ஆண் எழுத்தாளர்களும் எழுத்தாழி பெற்ற நல்முத்துக்களே!

அதேபோல், 'பெண்ணவள் முகத்திரையால் தன்னை மூடிக்கொண்டதால் முழு பிரபஞ்சமுமே அதனில் முடங்கி விட்டது' எனும் கோணல் கருத்தை நாணல் கொண்ட நவீன யுக நங்கையர் நகர்த்தி - தகர்த்திவிட்டு, எத்துறையாயினும், அத்துறையில் தம் பாதங்களைப் பதித்து முயற்சி யாத்திரை மேற்கொள்ளும் அவர்களின் படைப்புக்கள் கூட, வசந்த ஓடத்தின் துடுப்புக்களே, என்றின் அது மிகையல்ல!

இவ்வரிசையில் பல்லாக்கங்களையும் ஊக்கமாகவும் தனக்கே உரிய பாணியில் தந்து கொண்டிருக்கும் சிந்தனையாளர் ஸினுா.:.பா அன்ஸார் அவர்களின் கவிதை, அன்னையர் தினத்தையொட்டி அலங்கரிக்கப்பட்டதுடன், தாய்மையின் தாத்பரியத்தை மதிப்பச்சத்துடன் தன்னிகர்படுத்தியுள்ளது என்பது உண்மையே! மேலும், வசந்த வாசகர்களின் பெரு வரவேற்பைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கும் பின்னட்டை வாக்கியக் கருவூலத்திலும் உள்தலைப்புக்கிரீடங்களிலும் விளம்பர வியாக்கியானங்களிலும்கூட அவரின் சிந்தனைத்தூரிகைக்கு சிதறாத பங்கு உண்டு!

மேலும் மனிதவாழ்வின் பண்புநலன்களின் வெளிச்சத்தில் இறையச்சம் என்பதன் பரிணாமத்தை திருக்குர்ஆன் மற்றும் நபிமொழி வாயிலாக விளக்கியிருக்கிறார் மற்றொரு பெண் எழுத்தாளர் ஷகீரா பஷீர்.

இந்திய - இலங்கை நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களின் சுகந்தங்கள், எமது விருந்தினர் பக்கங்களின் பன்னீர்பூக்கள்! சத்தியப்பாதையை நித்திய வாழ்க்கையாகத் தேர்ந்தெடுத்த நமது சகோதர-சகோதரி நெஞ்சங்களின் இஸ்லாத்தின்பால் திண்மைத்தழுவல்கள், கல்நெஞ்சத்திலிருந்து கூட கண்ணீர் திவலைகளை வரவழைக்கக்கூடியவைகளாக நடுப்பக்கத்தில் நர்த்தனம் செய்கின்றன.


வசந்தம் தங்களின் வாழ்வியல் முன்னேற்றத்துக்கான ஒரு கருவியாக செயற்பட தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறது. இதுவரை போலவே இனிவரும் காலங்களிலும் புதிய ஆசிரிய குழுமத்துடன் அதன் படைப்புக்கள், நீங்கள் படைக்கப்பட்டதன் நோக்கத்துக்காக, உன்னத வாழ்க்கை நெறியின் வழிமுறை நிர்மாணித்தலுக்காக தன்னை இன்னும் சிறப்பாக அர்ப்பணித்துச் செயற்படும், வல்ல இறைவன் நாடினால்!

எம் வசந்த கடலில் குறைகள் கரை தட்டாது என சொல்லிட இயலாது, நாம் மனிதப்படைப்புக்கள் என்பதால்! ஆகவே, உங்கள் சிந்தனைகளை, கருத்துக்களை, எந்நிலையிலும் எவ்வடிவத்திலும் எடுத்துக்கூறுங்கள், அவை குறைவாகவோ, நிறைவாகவோ இருப்பினும் சரியே! வசந்தத்தை, வசந்தம் கொண்டு வாழச்செய்யும். உங்கள் வாழ்த்துத் தூறல்களால் எம் வசந்தம் வனப்புப்பெறும். ஏகஇறையருள் துணை நிற்கட்டும்!

ஆசிரியர்
amusavir@gmail.com

# “மனித வாழ்வின் வெற்றிமழைசத் தூறல்கள்!




காற்று தவழ மறுத்தது, ஏனென்று கேட்டேன்-
-வசந்தம்- துணைக்கு இல்லையே என்றது..!
-வசந்தம்- எப்போது வரும்... என கேட்டேன்-
இஸ்லாம் தன்னை அலங்கரித்துக் கொள்ளும்போது
என்றார்கள்..!
இஸ்லாம் தன்னை எப்போது அலங்கரித்துக் கொள்ளும்...
என்று தென்றலிடம் கேட்டேன்-
தென்றல்,
அங்கே, IPC-இல்
இஸ்லாத்தை நெஞ்சில் சுமந்து...
அழைப்புப்பணியை சுவாசமாகக் கொண்டு...
இறைபாதையில் அல்லும் பகலும்
உழைத்துக் கொண்டிருக்கும் வேளை-
மாதத்தின் பதினைந்தாம் நாள் நிறைவு பெற்றிருக்கும்போது
என்றது...!

கவிஞர் ஷம்சுதீன்
ஷுவைக்
குவைத்

பக்கத்துக்கு பக்கம் அறிவுச்சாரலடிக்கின்றது, வசந்தத்தைப் புரட்டும்போது. அது கூறும் விஷயங்கள், மனிதவாழ்வின் வெற்றி மழைத் தூறல்களாகப் பொழிகின்றது என்பதே உண்மை!

இராஜ்குமார்
தஞ்சை, தமிழ்நாடு
ஹஸாவியா, குவைத்

சுற்றுசூழல் பற்றி இஸ்லாம் பேசுவதை இன்றைய சூழலவியலாளர்கள் சிந்தித்து அமல்படுத்தினால் ஓசோன் ஓட்டைக்கெல்லாம் வழியேது? விட்டில் பூச்சியா வாழ்க்கை? பெண்களுக்கு-பெற்றோருக்கு ஒரு நல்ல பாடம்! கரன்சிகளின் கதகதப்பில் வாழ்வை தொலைக்கும் மக்கள் சிந்திக்க வேண்டும்! திருக்குர்ஆன் பேசுகிறது-எளிய இனிய நடை!

அப்துர் ரஹ்மான்
சென்னை, தமிழ்நாடு
ஹவல்லி, குவைத்

விட்டில்.. குறுங்கதை கண்ணீர் வரவழைத்து விட்டது. மேற்கத்திய மோகத்தை துச்சமென மதித்த அக்கதையின் நாயகி போல் ஒவ்வொரு பெண்ணும் விளங்க வேண்டும்!

ஸ்டாலின்
பேர்ணாம்பட்டு, தமிழ்நாடு
பர்வானியா
குவைத்

டாக்டர். ஜாகிர் நாயக் உரைகள் அடங்கிய சி.டி.-க்கள் பல கண்டிருந்தாலும் அவருடய ஆங்கில நிகழ்வை நேரில் கண்டு கேட்டது த்ரில்லிங். தமிழில் நல்ல வருணனையுடன் அந்த நிகழ்ச்சியைப் படித்தது இதமளித்தது.

பிரேமநாதன்
இராமநாதபுரம், தமிழ்நாடு
ஹஸாவி
குவைத்

அசத்தல் தலைப்புக்கள், சிந்திக்க வைக்கும் அருமை படைப்புக்கள், அட்டகாசமான பொருத்த அழகு படங்கள், குறிப்பாக, கவிதைப் பக்கமும், முஹம்மத் (ஸல்) அவர்கள் குறித்து மாற்றுமத அறிஞர்களின் கருத்துக்கள் இரண்டும் பொற்கிரீடத்தில் வைரக்கற்கள். ஒவ்வொரு இதழும் வித்தியாசமாக, வாழ்க்கை வசந்தமாக வெளிவந்து கொண்டிருக்கும் வசந்தம்- மென்மேலும் வளர உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

மாத ஆரம்பத்திலேயே -வசந்தம் - கிடைப்பின் மிகவும் நன்று

முஹம்மத் ரபீக்
கள்ளக்குறிச்சி, தமிழ்நாடு
ஸூப்ஹான்
குவைத்

டாக்டர். ஜாகிர் நாயக் நிகழ்ச்சி பற்றிய தொகுப்பு கண்டேன். நல்ல நிகழ்ச்சி, எனினும் தனிநபர் ஒருவரை புகழும்போது கொஞ்சம் குறைத்திருக்கலாம் என கருதுகின்றேன்.

ஷான் பாஷா
குவைத்

காலடியில் சிம்மாசனம் ஈச்ச ஓலையே அரியாசனம்-கட்டுரை சொத்து சேர்ப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட இன்றைய தலைவர்களுக்கு நல்ல பாடம்!

நஸீர் ஹுஸைன்
விக்கிரவாண்டி, தமிழ்நாடு
பினீத்-அல்-கர்
குவைத்

வசந்தம் மார்ச் இதழ் கண்டேன். படிக்க படிக்க நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நெறிமுறைகள் இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வாழ்க்கைக்குத் தேவையான அரிய பொக்கிஷம் என்பதை தெளிவுபடுத்தியது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவருடைய வழிமுறை ஒன்று மட்டுமே நேரியது என்பதை ஆதாரப்பூர்வமாக விளக்கியுள்ளீர்கள். மாற்றுமத அறிஞர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள அன்பையும் அதாரத்துடன் அறிவுப்பூர்வமாக தந்த 'வசந்தம்-மாத இதழ் , வார இதழாக வந்தால் குவைத்வாழ் தமிழ் மக்களுக்கு வரப்பிசாதமாக அமையும். வளரட்டும் உங்கள் பணி.

முஹம்மத் அமீன் (அபுமாஹின்)
சால்மியா
குவைத்

டாக்டர். ஜாகிர் நாயக் நிகழ்ச்சித் தொகுப்பைக் கண்டேன். அவருடைய குவைத் விஜயம் குவைத் வரலாற்றில் ஒரு மைல்கல் என்றால் அது மிகையல்ல. அவர் விதைத்த ஆத்மானந்த உணர்வுகள் நிஜமாகவே விழுக்காடுகள் அற்றவை. அன்னாருடைய தொடரை அழகு தமிழில் வாசிக்கக் காத்திருக்கின்றேன்.


ருமைஸா நூருல்லாஹ்
இராமநாதபுரம், தமிழ்நாடு
பஹாஹீல்
குவைத்



இந்த இதழின் வலப்பக்கங்களில் உள்ள திரு கணேசன் தமிழாக்கிய தெரஸா அன்னை-யின் சிந்தனை முத்துக்களைத் தொகுத்தவர் சகோதரி ஸினூ.்.பா அன்ஸார்!

வாசகர் வசந்தம் பகுதிக்கு வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன. வாசகர்கள் தங்கள் படைப்புக்களை முதல் பக்கத்தில் உள்ள வசந்தம் முகவரிக்கோ அல்லது amusavir@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பலாம். வாசகர்கள் தங்கள் மின்னஞ்சல் மற்றும் குவைத் முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றையும் குறிப்பிடுதல் நலம்!

முதலாண்டு சிறப்பிதழ்



# முஸ்லிம்களுக்கு இறைவனா முஹம்மத் (ஸல்)?

எழுத்து



என்.எம்.எம். ஹுஸைன்

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

சென்ற இதழ்களில் நாம் நோக்கியது போன்று, மனித சமூகத்தை நல்வழிப்படுத்தும் உயர் நோக்கங்களுக்காக அனுப்பப்பட்ட இறைத்தூதர்களின் மறைவுக்குப் பின் ஏற்பட்ட நீண்டகால இடைவெளியில் மனித சமூகம் மீண்டும் மீண்டும் வழிகேட்டை நோக்கி திரும்புகிறது, மனோ இச்சைகளுக்கு அடிமைப்பட்டு விடுகிறது. சிலர் சிலைகளை செய்து வணங்க ஆரம்பித்தனர். சிலர் நட்சத்திரங்களையும் கோள்களையும் மற்றும் சிலர் இன்னபிற மனிதர்களையும் மிருகங்களையும் கூட வணங்க ஆரம்பித்து விட்டனர். இத்தகைய அதலபாதாளத்திலிருந்து மனித சமூகத்தை பாதுகாக்க நாடிய இறைவன் காலத்துக்குக் காலம் தனது தூதர்களை அனுப்பி வேதத்தையும் ஞானத்தையும் அவர்களுக்கு வழங்கி, மனிதர்களுக்கு சத்தியத்தையும் அசத்தியத்தையும் தெளிவுபடுத்தி நேர்வழியின்பால் அழைப்பு விடுக்குமாறு கட்டளையிடுகிறான்.

### அகிலத்தாருக்கு அருட்கொடை

இவ்வாறு இறைவனால் மனித சமூகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட தூதர்களின் வரிசையில் இறுதித்தூதராக நபி முஹம்மத்(ஸல்) அவர்களை அகிலத்தாருக்கு அருட்கொடையாகவும் நேர்வழியைக் காட்டிக் கொடுப்பவராகவும் சத்திய ஜோதியை ஏற்றிவைப்பவராகவும் அனுப்பி வைக்கிறான். இது பற்றி தனது திருமறையில் இறைவன் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :

*“(நபியே!) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம். நீர் அவர்களிடம் கூறும்: உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் அவனுக்கு அடிபணிந்தவர்களாய் இருக்கிறீர்களா, என்ன?...(21:107-108)*

மேலும் பாரக்க: (33 : 45 - 46)

மேலும் நபிகளார் (ஸல்) அவர்கள் தான் அனுப்பப்பட்டுள்ள நோக்கம் பற்றி குறிப்பிடும் போது:

*“எனக்கும் மனித சமூகத்துக்குமிடையே உள்ள உறவு எப்படிப்பட்டது என்றால், நெருப்பு மூட்டிய ஒரு மனிதன் அந்த நெருப்பை நோக்கி வரும் விட்டில் பூச்சிகளை நெருப்பில் விழுந்து எரிந்து விடாமல் தனது கைகளால் தட்டித் தட்டித் தடுத்துக்கொண்டிருப்பவனைப் போன்றதாகும், அதாவது நீங்கள் கொழுந்து விட்டெரியும் நரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றீர்கள், நானோ உங்கள் இடுப்புகளைப் பிடித்து இழுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீங்களோ எனது கையைப் பறித்துக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறீர்கள்! (ஆதாரம்: புகாரி,முஸ்லிம்)*

என கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனவேதான், இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் முழு மனித சமூகத்துக்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்டு இருக்கிறார்கள் என்பதாக திருக் குர்ஆன் குறிப்பிட்டுக்காட்டுகிறது :

*“முஹம்மதே! நீர் கூறும் : மனிதர்களே! திண்ணமாக, வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியாகிய அல்லாஹ்வின் தூதராக நான் உங்கள் அனைவர்பாலும் அனுப்பப்பட்டுள்ளேன்...!(7:158)*

அண்ணல் நம் பெருமானாரின் தூது முஸ்லிம் சமூகத்துக்கு மட்டும் உரியதல்ல, முழு மனித சமூகத்துக்கு உரியதாகும் என்பதை காலம் தாழ்த்தாமல் புரிந்து கொண்டு எம் வாழ்க்கைப்பாதைக்கு சத்தியத்தைக் கொண்டு ஒளியூட்டுவோம்!

இறுதியாக ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்! இவ்வாறு இறைவனால் காலத்துக்குக் காலம் மனித சமூகத்துக்கு வழிகாட்டிகளாக அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் அனைவரும் மனிதத் தூதர்களே அன்றி, அவர்கள் கடவுள்களோ அல்லது கடவுளின் அவதாரங்களோ அல்ல.

உதாரணமாக, ஒரு வகுப்பறையில் பயிலும் மாணவர்களால் ஆசிரியர் இன்றி பயில முடியாது! இவ்வாறே உலகம் எனும் தேர்வுக்களத்தில் மனிதன் வெற்றி பெற வேண்டுமாயின் படித்து செயல்படுத்த வேண்டிய புத்தகமே இறைவேதமாகும். அந்த இறைவேதத்தை கற்றுத்தரும் ஆசான்களே இறைத்தூதர்கள்!

எனவே, அவர்களின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டுமே தவிர, அவர்கள் வணங்கப்படக் கூடியவர்கள் அல்ல என்பதை புரிந்து சத்தியத்தின் அடிப்படையில் தடம்பதித்துச் செல்வோம். ஈருலக வெற்றியாளர்களாக மாறிடுவோம்! என்றும் இறை அருள் நமக்குத் துணை நிற்கும்! (முற்றும்)

### எது எப்படியானாலும்....!!

*நீ புரியும் நேர்மறை செயல்களுக்கு*
*உலகம் எதிர்மறையாக சிந்திக்கலாம்*
*எது எப்படியானாலும்*
*உண்மைப் பிரதிபலனை*
*மறுமையில் இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்...!*

முதலாண்டு சிறப்பிதழ்

# நீங்கா ஒளியாய் ........நேர்வழியாய்...

இஸ்லாத்தைக் குறித்து பல்வேறுவித கண்ணோட்டங்கள் உண்டு. அதற்கு வெவ்வேறு வகையான காரணங்களை அடுக்க முடியும். பொதுவாக இஸ்லாத்தைப்பற்றிய உண்மையான தெளிவின்மை அல்லது அதனைப் பின்பற்றுவோர் அதன் கட்டளைகளுக்குக் கீழ்படியாதிருப்பது குறித்த புறவாழ்வியல் அம்சங்கள் அல்லது அம்மார்க்கம் குறித்து அதன் விரோதிகளால் பரப்பப்பட்டு வரும் அவதூறுப் பிரச்சாரங்களும் மற்றும் அதன் மீதான ஆளுமைத் தாக்கங்களும்! இத்தகைய செறிவற்ற - இயலாமை, அறியாமை, வழிகாட்டலின்மை காரணமாக பெரும்பாலான முஸ்லிமல்லாத சகோதர - சகோதரிகள் வெற்றிக்கு வித்திடும் இம்மாபெரும் வாழ்க்கை வழிகாட்டல் நெறிமுறையின் அறிவுரைகளை தமதாக்கிக்கொள்ளவும் அதன் ஆக்கபூர்வ பரவல் குறித்த விழிப்பு உணர்வு அற்றவர்களாகவும் இருப்பதைக் காண முடியும்.

உண்மை வாழ்க்கை நெறியின் தத்துவார்த்தமான யதார்த்த உண்மைகளை அறியாத, அல்லது அறிந்தும் புரியாத முஸ்லிமல்லாத எம் சக மனிதர்களுக்கு அந்த வெற்றி நெறியின் மூலாதாரங்களை வழங்குவது அவர்கள் அதனை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கிக் கொள்ள தூண்டுகோலாக அமையும். இதனால் அவர்தம் சிந்தனைப் போக்கு தெளிவுடையதாக ஆக்கப்பட்டு ஆக்கபூர்வ இலட்சிய வாழ்வின் உன்னத வெற்றியின்பால் அவர்களை இட்டுச்செல்லும் என்பது திண்ணம்.

இத்தகையதொரு சீர்மிகு சிந்தனைக்கு செயல்வடிவம் தருமாறு தென்கொரிய நாட்டு இஸ்லாமிய நிலையம், டாக்டர் அஷ்-ஷேக் முஹம்மத் அத் தப்தபாஈ அவர்களைக் கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க டாக்டர் அவர்கள் இச்சிறிய ஆக்கத்தை வழங்கினார்கள். இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளை இக்கட்டுரை இரத்தினச்சுருக்கமாக எடுத்துரைப்பதோடு மனித குலத்தின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் சரியானதொரு தீர்வை வழங்கும் என்று நம்புகிறோம்.

(ஆ-ர்)

உலகமக்களை பல்வேறு திசைகளில் கூறுபோட்டுக் கொண்டிருக்கும் இன்றைய மதங்களைப் பாருங்கள். அவை இப்பேரண்டத்தின் படைப்பாளன் குறித்து எத்தகைய தவறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளன?

ஒரு சிலர், தன்னைப் போன்ற ஒரு மனிதனை வணங்குகின்றனர் என்றால், மற்றும் சிலர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை தமது இறைவனாக ஆக்கிக் கொள்கின்றர். ஒரு சிலர் தமது கைகளால் படைத்த பொருட்களை தம்மை படைத்த படைப்பாளனாக ஆக்கிக் கொண்டனர் என்றால், இன்னும் சிலர் இத்தகைய குழப்பமே தேவையற்றது எனக்கூறி, “உலகம் எவராலும் படைக்கப்படவில்லை, நம்மைப் படைத்தவன் என்று ஒருவனில்லை, அனைத்தும் தாமாவே உருவாகின” என்று கூற ஆரம்பித்தனர்.

## இறைவனின் ஏகத்துவப் பேரம்சம்

இன்னொரு புறம் எல்லாவற்றையும் மிகைத்து தனித்துவமிக்க ஒரு கொள்கை தலை நிமிர்ந்தது. அதனைக் காணுங்கள். இந்தக் கொள்கையைப் பொறுத்த வரை அது மனிதனைப் படைத்த ஆற்றலின்பால் இட்டுச்செல்கின்றது. இணை துணை எதுவுமற்ற மகோன்னதமிக்க, மகாத்மியம் பொருந்திய கற்பனைக்கு எட்டாத எவ்வித உலக படைப்புக்கும் பொருந்திப் போகாத மாபெரும் ஏகத்துவ ஆற்றல்!

அந்த ஆற்றல் கொண்டவன் யார்? அவனே அல்லாஹ்!! அவன் ஒருவனே! ஒரே ஒருவனே!! அவனைத்தவிர வேறு ஒருவருமில்லை. அசத்தியத்தின் இருள்களிலிருந்து அவர்களை வெளியேற்றி சத்தியப் பேரொளியின்பால் கொணர்பவன் அவனே. அவர்களுடைய பல்வேறு பிரச்னைகளிலிருந்து அவர்களை வெளிக்கொணர்பவனும் அவனே! ஒரே ஏக இறைவன் - படைப்பாளன்பால் மீண்டு, அவனை மட்டுமே வணங்கி வழிபடும்படி அந்தக் கொள்கை அழைப்புவிடுக்கின்றது. அந்த ஏக நாயனைத் தவிர வேறு எவருக்கும் அடிபணியக் கூடாது. அவன் ஒருவன் மட்டுமே! அவனுக்கு இணையாக எவருமில்லை. அவன் பிரபஞ்சம் அனைத்திலும் எல்லா படைப்பினங்களினதும் படைப்பாளன் ஆவான். அவன் மட்டுமே வணத்துக்குரியவன். மேலும் முழு அண்டசராசரத்தையும் தன் ஆட்சிக்குள் அகப்படுத்தி ஆளக்கூடியவன். இப்பிரபஞ்சத்தின் அனைத்துயிர்களுக்கும் சகல விதமான தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவனாவான். தனது துன்பங்களை அவன்பால் ஒப்படைத்து, தானடைந்து கொள்ளும் சந்தோஷங்களுக்காக, அவனுக்கு நன்றி செலுத்தி, புகழ்ந்து அந்த ஏகஇறைவன்பால்





# ……………ஏகத்துவ வாழ்க்கை!

முதலாண்டு சிறப்பிதழ்




எழுத்து

டாக்டர் அஷ்-ஷேக் முஹம்மத் -அல் - தப்தபாஈ

உர்து மூலத்திலிருந்து தமிழில்

அப்மு


தான் செய்யும் தவறுகளுக்கு மன்னிப்பு கோரி அவன்பாலே மீள வேண்டும்.

### தூதுத்துவ துணை

தனது மனிதப்படைப்பை எந்தவொரு இலக்குமற்ற படைப்பாக அந்த ஏகன் விட்டுவைக்கவில்லை. அவன் செல்ல வேண்டிய உண்மையான நேரான பாதையிலிருந்தும் அவனை விலக்கி வைத்து விடவில்லை. மாறாக, அவனுடைய நேர்வழிக்காக அவனிலிருந்தே சிலரைத் தேர்ந்தெடுத்து தன்புறத்து செய்தியாளர்களாக, தூதர்களாக அனுப்பி வைத்தான். அவ்வாறு



அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள், தம் மக்களிடையே அவர்களைப் படைத்த படைப்பாளனின் அறிவுரைகளை எத்தி வைத்தனர். மருண்டுபோன அவர்களின் கண்களுக்கு சாந்திக்கான அமைதிக்கான வழியைக் காண்பித்துத் தந்தார்கள்.

அவர்தம் அறிவுரைகளில் இறை நியதிக்குட்பட்ட பல்வேறு நன்மைகள் இருந்தன. மனித இனத்துக்கு எதிரான அனைத்து கொடுமைகளையும் எதிர்ப்பது எப்படி என கொள்கை ரீதியாகவும், நடைமுறைப்படுத்தப்பட்ட மகோன்னத நற்செயல்கள் மூலமாகவும் விளக்கிக் காட்டப்பட்டது. இது மனித இன தோற்றம் முதல் காலம் காலமாக இறையாணையின் புறத்து நடைபெற்று வந்தது.

எந்தவொரு தொடருக்கும் முற்று உண்டே..! இத்தகைய தூதுத்துவ வரிசைக்கும் இந்த பேரண்ட அதிபதி சுமார் 1400 வருடங்களுக்கு முன்னர் ஒரு முற்றுப்புள்ளி வைத்தான்.

ஆம்! அகிலமனைத்துக்கும் ஓர் அருளாக, தூதுத்துவ வரிசையின் இறுதி மாமன்னனாக, மனித இனம் முழுமைக்கும் ஒரு முன்மாதிரியாக முஹம்மத் (ஸல்) அவர்களை இறுதித்தூதராக அனுப்பி வைத்தான் அந்த ஏகன்! தனது இறைச்செய்தியாக திருக்குர்ஆன் எனும் இறுதி வேதத்தை அவர் மீது இறக்கியருளினான்.

### அந்த இறைசெய்தி எது?

இறைவனின் அறிவுரைகள் அனைத்தையும் உள்ளடக்கியது. மனிதர்களை நன்மையின்பால் அழைப்பது!

தீமைகளை விட்டு விலகி நிற்கும் வழிமுறைகளை ஏவுகின்றது.

நிரந்தர வெற்றிக்கான முக்தியுடைய இலகுவான மலர்ப்பாதைகளை அடையாளம் காட்டியது.

மீள முடியாத தோல்விச் சருகுகளை விட்டும் நம்மை விலக்கி வைத்துக்கொள்ள அழகிய நடைமுறைகளை வழங்குகின்றது!

-இறைவன் நாடினால், அடுத்த இதழில் தொடரும்.

## எது எப்படியானாலும்....!!

*நீ பெற்றுள்ள மிகச்சிறந்ததை*
*இவ்வுலகிற்குக் கொடு!*
*அது போதவில்லை என மக்கள் புலம்புவார்கள்.*
*எது எப்படியானாலும்*
*மிகச்சிறந்ததை இவ்வுலகிற்குக்கொடு!*

# மனிதன் என்றுமே புதிய மொடல்!

எழுத்து

டாக்டர் எம்.எல்.எம். றயீஸ் இலங்கை

எனது நண்பர் ஒருவர் ஒரு புதிய வாகனம் ஒன்று வாங்கியிருந்தார். புதிய ரக பென்ஸ். பல இலட்சங்கள் பெறுமதியான அந்த ஆடம்பர வாகனம் பார்ப்பதற்கு மிகக் கவர்ச்சிகரமானது. அனைத்து விதமான புதினங்களையும் (Options) அவருடன் பயணம் செல்லும் போது அவர் கூறினார். பழைய மொடலுடன் ஒப்பிடும்போது அதன் கட்டமைப்பில் (Structure) மாற்றம் இருக்கிறது. அதன் தொழிற்பாட்டில் (Functions) மாற்றம் இருக்கிறது. அது "பென்ஸ் கம்பனியின் அற்புதமான படைப்பு" மனிதர்கள் படைக்கின்ற இவ்வாறான படைப்புக்கள் முழுமை பெற்றவையா? நிச்சயமாக இல்லை. பல வடிவமைப்பாளர்களின் (Designers) மூளையில் உருவான அமைப்பு பல வருடங்களாக செதுக்கப்பட்டு உருவாவதுதான் புதிய டிஸைன். இது அறிமுகப்படுத்தப்படும்போது இதை விட அழகான ஒன்று இருக்க முடியாது என்று எண்ணும் அளவுக்கு கவர்ச்சியாக இருக்கும். ஆனால், இரண்டு வருடங்கள் சென்று விட்டால்....

இன்று (Best Model) மிகச் சிறந்த அமைப்பு என்று கருதுபவை யாவும் நாளை பழையதாகி (Out dated) மொடல் மாறிவிடுகிறது. அதாவது, நேற்றைய படைப்பில் குறை இருந்திருக்கிறது.

இவ்வாறு மனிதர்கள் படைக்கின்ற படைப்புக்கள், வாகனங்கள், விமானங்கள், வானுயர்ந்த கட்டடங்கள் அது எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு வருடமும் புதிய மொடல்கள் வருவதும் பழையவை கவர்ச்சியிழந்து விடுவதும் இயல்பு. *பலவீனமான மனிதர்களின் படைப்பில்அழகைக் காண்கின்ற பலர், பலவீனமான படைப்புகளை அற்புதமாகக் கண்டு - ஆச்சரியப்படுகின்ற பலர் தனது கண்முன்னே தெட்டத் தெளிவாகத் தெரியும் ஏகஇறைவனின் படைப்பின் அற்புதங்களைக் கண்டு கொள்வதில்லை.*

அல்லாஹ்வுடைய அற்புதமான படைப்புகளில் ஒன்றான மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள். நூறு வருடங்கள் என்ன, ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் எந்த அமைப்போ இன்றும் அவன் அதே அமைப்புதான்! மனிதனின் அமைப்பிலும் தொழிற்பாட்டிலும் ஒரு கடுகளவேனும் கூடினாலும் குறை, குறைந்தாலும் குறை!மனிதர்கள் படைக்கின்ற படைப்புக்கள் காலம் கடந்து கவர்ச்சியற்றுப் போவது போல், இறைவனின் படைப்பான மனிதன் என்ற மொடல் காலம் கடந்து கவர்ச்சியற்றுப் போவதில்லை.

*திண்ணமாக, நாம் மனிதனை மிகச்சிறந்த அமைப்பில் படைத்தோம். (95:4)*

என்று பேசுகின்றது திருக்குர்ஆன்! இந்த வசனத்தின் தாக்கம் நமக்கு எப்போது தெரிய வருகின்றது?

மனிதன் என்கின்ற பூரணமான அமைப்பில் இருந்து சில விகாரங்கள் காரணமாக குறைபாட்டுடன் பிறந்து வைத்தியசாலைகளிலேயே வாழ்க்கையைக் கழிக்கின்ற பல நோயாளிகளைப் பார்க்கின்ற போதுதான்!

ஒரு சிறு உதாரணத்தைக் காண்போம். ஒரு வாகனத்தில் ஐந்து கதவுகளோ அல்லது மூன்று கதவுகளோ இருக்க முடியும். அவ்விரண்டு அமைப்புக்களில் குறைபாடு காணப்படினும் இவ்விரண்டு விதமான வடிவமைப்புக்களும் சரியே! இது மனிதர்களின் கைங்கர்யம்! ஆனால் இறைபடைப்பின் அழகமைப்பையும் உன்னத மேன்மையையும் காணுங்கள்.



மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள்.நூறு வருடங்கள் என்ன, ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் எந்த அமைப்போ இன்றும் அவன் அதே அமைப்புதான்!

மனிதஉடலில் பெரு விரலின் படைப்பே ஒரு அற்புதம். பெருவிரல் இல்லாவிட்டால் கையோடு இணைந்த பூரண வடிவான விரல்கள் ஐந்தில் ஒன்று குறைவு. எனவே ஐந்து விரல்களுடன் கூடிய ஒரு கையின் தொழிற்பாட்டில் 20% குறைவு ஏற்படலாம் என்று சிலர் நினைக்கக் கூடும். ஆனால், விரல்களிலெல்லாம் முக்கியமானதும் மற்றைய விரல்களுக்குச் செங்குத்தாய் அமைகின்ற பெருவிரல் இல்லாவிட்டால் கையின் தொழிற்பாட்டில் 50%-க்கும் மேல் குறைவு ஏற்படும். மூளையின் மேற்பரப்பில் ஏறக்குறைய 20% இடம் பெருவிரலின் தொழிற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாருங்கள்! பெருவிரல் சிறியதாக இருந்தபோதும் அதன் பெருமை பெரியது, உன்னதமானது!

நூறு வருடங்களுக்கு மேல் வாழத் தகுதி பெற்ற மிக உறுதியான படைப்பு மனிதன். இறைவனின் படைப்பின் அற்புதத்தைப் பாருங்கள். இவ்வளவு உறுதியான படைப்பில் மரணம் என்ற யதார்த்தம் எவ்வாறு இழையோடியிருக்கின்றது என்பதை! இது இன்னுமொரு அற்புதம்.மிகத்திடமாக நூறாண்டுகள் வரை வாழக்கூடிய உடலுக்குள், எந்தக்கணமும் விலகிச்செல்லக் காத்திருக்கும் உயிர் எவ்வளவு அற்புதமாய் இழையோடியிருக்கிறது? அற்புதமான உடலமைப்பில் ஒட்டியிருக்கும் உயிர் எந்தக்கணமும் சென்றுவிடலாம் எனும் யதார்த்தத்தை மறந்து விடாமல் வாழ்வோமாயின் பாவங்களிலிருந்து எங்களைப் பிரித்து வாழ முடியும். ■

முதலாண்டு சிறப்பிதழ்

# சந்தேகக்கோடு அது சந்தோஷக்கேடு!

"எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுகிற இந்த மனுஷனைக் கட்டிக்கிட்டு நான் படுகிற பாடு அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்" என்று பல பெண்கள் புலம்புவதை நாம் கேட்டிருக்கலாம்.

"என் சம்சாரத்ததை நெனச்சாலே அடிவயிறு கலங்குதடா. காற்றோட்டத்திற்காக ஜன்னலை திறந்து வச்சாகூட, எதிர் வீட்டுப் பெண்ணைப் பார்க்கத்தான் நான் ஜன்னலை திறந்ததாக சந்தேகப்பட்டு "ஓ"ன்னு கத்தறா. ஒரு சந்தேகப் பேர்வழியை கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்க்கையே நரகம் ஆயிடுச்சு!"

விரக்தியின் உச்சிக்கே சென்று தன் நணபர்களிடம் இவ்வாறு வருந்தும் பல ஆண்களையும் நாம் பார்த்திருக்கலாம்.

இந்தப் புலம்பலுக்கும் விரக்திக்கும் காரணம்- அடுத்தவர் மீது அளவுக்கு மீறி சந்தேகப்படுவது.

- இந்தச் சந்கேம் குடும்பத்தை சீர்குலைக்கிறது.
- நண்பர்களைப் பிரிக்கிறது.
- முதலாளி - தொழிலாளி உறவைப் பாதிக்கிறது.
- பங்காளியை பகையாளி ஆக்குகிறது
- அண்ணன் - தம்பியை எதிரிகள் ஆக்குகிறது
- சமூகத்தில் குத்து - வெட்டு கொலைகளுக்குக் காரணம் பெரும்பாலும் இந்த சந்தேகப் பேய்தான்.

அதேபோல், பாலின வேறுபாட்டை மட்டுமே காரணம் காட்டி, ஆக்கபூர்வமான மார்க்க வரைமுறைகளுடன் பழகும் இரு நல்ல நண்பர்களை சந்தேகக்கண் கொண்டு பார்த்து வீண் குழப்பங்கள் உண்டுபண்ணும் பொறாமையாளர்களையும் காணலாம்.

அப்படியானால் யார் மீதும் எதற்கும் சந்தேகமே படக்கூடாதா? படலாம். ஆனால் எல்லை மீறக் கூடாது. ஏனெனில் சில சந்தேகங்கள் நம்மைப் பாவத்தில் கொண்டு தள்ளிவிடும்.

எடுத்துக்காட்டாக -

நீங்கள் ஓர் அறையில் வாடகைக்கு தங்கியிருக்கிறீர்கள். உங்கள் அறையில் இன்னும் நான்கு நண்பர்களும் தங்கியுள்ளனர். அடிக்கடி உங்கள் சட்டைப் பையில் இருந்து சில்லறைகள், ரூபாய் நோட்டுகள் காணாமல் போய்விடுகின்றன. கூட இருக்கும் நால்வரில் ஒருவர்தான் 'கைவரிசையை' காட்டுகிறார். ஆனால் யார் என்று தெரியவில்லை. இப்பொழுது என்ன செய்வது?

சகட்டுமேனிக்கு எல்லோர் மீதும் சந்தேகப்பட்டு, 'ஆ..ஊ..'என்று கத்தி ரகளை செய்வதால் எந்தப் பயனும் ஏற்படாது. அந்த ரகளையால் உண்மையான திருடன் எச்சரிக்கை அடைந்து தப்பி விடுவான். இதர நண்பர்களின் இனிய நட்பையும் நீங்கள் இழக்க நேரிடும். அது மட்டுமல்ல, நிரபராதிகள் மீது அவதூறு சுமத்திய பாவமும் உங்களைச் சேரும்.

இது போன்ற சமயங்களில் பதற்றப்படாமல், புத்திசாலித்தனமாகச் செயல்பட்டு உண்மையான குற்றவாளியை கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும். சந்தேகம் குறித்து திருக் குர்ஆன் நமக்கு ஓர் அருமையான அறிவுரையை அருள்கிறது:


*'அதிகமாக சந்தேகம் கொள்வதைத் தவிர்த்து விடுங்கள். ஏனெனில் சில சந்கேங்கள் பாவமாக இருக்கின்றன!. (49:12)*

பாவமாக அமைகின்ற சந்தேகங்கள் என்னென்ன?

மனிதன் மற்றவர்களைப் பற்றி எந்தக் காரணமும் இன்றி சந்தேகப்படுவது, அல்லது மற்றவர்களைப் பற்றி கருத்துக் கூறும்போது எப்போதும் தவறான சந்தேகத்தில் இருந்தே ஆரம்பிப்பது, அல்லது வெளிப்படையாக எவர்களின் நிலை, அவர்கள் நல்லவர்கள் - கண்ணியமானவர்கள் என்று காட்டுகிறதோ அவர்களைப் பற்றிச் சந்தேகிப்பது. இவையெல்லாம் பாவங்களாகும். வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் அவரைத் தீயவர் என்று கருதுவதும் பாவமாகும்.

வீண் சந்கேகங்களில் உழன்று, வாழ்க்கையை நரகம் ஆக்கிக் கொள்வதை விட நல்ல எண்ணங்கள், நேர்மையான சிந்தனைகள் மூலம் வாழ்வை சொர்க்கம் ஆக்கிக் கொள்வதே அறிவுடைமை.

சந்தேகப்பேர்வழிகள் சிந்திப்பார்களா?



பாலின வேறுபாட்டை மட்டுமே காரணம் காட்டி, ஆக்கபூர்வமான மார்க்க வரைமுறைகளுடன் பழகும் இரு நல்ல நண்பர்களை சந்தேகக்கண் கொண்டு பார்த்து வீண் குழப்பங்கள் உண்டு பண்ணும் பொறாமையாளர்களையும் காணலாம்.

எழுத்து




*சிராஜுல் ஹஸன்*
*பொறுப்பாசிரியர்*
*சமரசம்*
*சென்னை*

## எது எப்படியானாலும்....!!

*நீ மனஅமைதியும்*
*தேவையான மகிழ்ச்சியும் அடைந்தால்*
*மனிதர்கள் பொறாமைப்படுவார்கள்!*
*உன் மகிழ்ச்சியை சீர்குலைக்க முனைவார்கள்.*
*எது எப்படியானாலும்....,*
*மனமகிழ்ச்சி உடையவனாக இரு!*

# ஒரு புயலை அமைதி காவுகொண்டது..!





*சத்திய வழியை சர்வ வல்ல இறைவன் ஒருவருக்கு நாடியிருப்பின் அதனைத் தடுக்க எச்சக்தியுமில்லை என்பது இறைநியதிக்கு உட்பட்டது. இந்த வேத வாக்குக்கு ஏற்ப ஒரு வாய்மை நெஞ்சத்தின் திண்மைத் தழுவல் ஓரிறைக்கொள்கையின்பால் அமைந்தது. நெஞ்சம் வஞ்சமின்றி உரைக்கின்றது:-*

ஆம்!என் பிறப்பு இந்து மதத்தில் அமைந்தாலும் என்னில் மேலோங்கி நின்றது கிறித்துவ மதமே! அதற்கு ஏற்பவே என் வாழ்க்கை ரதம் பயணித்தது. 21 வருடங்களாக குவைத் நாட்டில் பணிபுரிகின்ற எனக்கும் என் எஜமானி வீட்டினருக்கும் மிகவும் அந்யோன்யம் காணப்பட்டது.

முஸ்லிம்களின் கடமைகளுள் ஒன்று புனித இறை இல்லத்தைத் தரிசிப்பதாகும். மேலும், அதனை வலம் வருவதும் அதில் ஒரு அம்சமாகும். இக்கடமையை நான் நிறைவேற்றுவதாக என் எஜமானி ஒரு நாள் கனவு கண்டு அது பற்றி என்னிடம் கூறினார். இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றிய ஒரு சிறு முகவுரை தந்தார். பிறகு இஸ்லாம் தொடர்பான புத்தகங்களை இஸ்லாமிய நிலையத்திலிருந்து எனக்குக் கொண்டு வந்து தந்தார்.

இந்த வேளையில், சவுதி அரேபியாவில் பணிபுரியும் என் மகன் என்னைத் தொடர்பு கொண்டார். அவர் என்னிடத்தில் பேசிய வார்த்தைகள் புனித இஸ்லாம் பற்றியது தான்! ஆனால் என் மனம் அதில் இலயிக்கவில்லை. கிறித்துவ மதமே சத்தியமானது எனும் என் பக்கத்து வாதம் என்னுள் பலமாக செதுக்கப்பட்டிருந்ததால் புதல்வனின் புனித அழைப்பை என் மனம் நிராகரித்தது. நான் மறுப்பும் தெரிவித்தேன்.

காலச்சக்கரம் வேகம் கொண்டு சுழன்றது. நான் எந்த மதத்தையும் ஏற்காத வெறுமை உள்ளத்துடன் என் நாட்களை வலம் வந்தேன். எனக்குள் இனம்புரியாததொரு சோகம் குடிகொள்ள ஆரம்பித்தது. சிறிது சிறிதாக என் கொள்கையின் சாயம் நீங்கி ஒரு புத்தொளி என் உள்ளத்தில் படர ஆரம்பித்தது. அணை உடைந்த வெள்ளமாயிற்று என் வார்த்தை ஊற்றுக்கள்!

புதுக்கொள்கையை ஏற்கும் திடமான உறுதியை என்னுள் ஏற்படுத்திக்கொண்டு அதை என் எஜமானியிடமும் கூறினேன்.அவர் முழு மனத்துடன் என்னை ஆரத்தழுவினார். என் ஆத்மானந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வதற்காக என் மகனைத் தொடர்புகொண்டேன். ஆனால் தொடர்பு கிடைக்கவில்லை.ஓரிரு நாளின் பின் அவரே என்னைத்தொடர்பு கொண்டார். அப்போது கண்ணீர்த்துளிகள் பூமியை ஸ்பரிசம் செய்ய என் வார்த்தைகள் உருவம் பெற்றன.

'அன்பு மைந்தனே! நீ அன்று கூறிய கொள்கையை இன்று நானும் ஏற்கின்றேன்.என் பரவசத்தை பகிர்ந்து கொள்ள முடியாது நீ எங்கு போயிருந்தாய்?'

'என் அன்புத்தாயே!! என் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டான். அனைத்து புகழும் இறைவனுக்கே! நான் ஏகத்துவக் கொள்கையை-புனித இறைஇல்லத்தைத் தரிசிக்கப் போயிருந்தேன். உங்களிடம் இக்கொள்கை நெறியின் மேன்மை பற்றி கூறும் போதே அதற்குள் பூரணமாக நுழைந்து விட்டேன் தாயே' என்றார்.

அத்துாய கொள்கையின் ஆனந்த ஒலி இப்பாரே செவியுறும் அளவிற்கு என் செவிகளில் மோதியது.

'மகனே! அப்புனித கொள்கைக்குள் நானும் அடியெடுத்து வைத்து என்னை இஸ்லாத்துக்கு தாரை வார்த்துவிட்டேன். முற்றிலும் அடிபணிந்த ஒரு முஸ்லிமாக நான் வாழத்தொடங்கி விட்டேன். அதற்கு உந்துகோலாக இஸ்லாமிய நிலையம் IPC-இல் தமிழாசிரியை நடத்தும் வகுப்புக்கள் என் இஸ்லாமிய உணர்வுகளுக்கு உரம் சேர்க்கின்றன. வல்ல இறைவன் என்னையும் உங்களையும் இஸ்லாத்தில் நிலைத்திருக்கச் செய்வானாக!!!!!

*இதோ, அன்றைய கலையரசி இன்றைய மர்யமாக பரிணமித்துக் கொண்டிருக்கின்றாள், செல்வம் பொதிந்த இக்குவைத்திய மண்ணிலே!*

*சத்தியம் நிலைக்கக்கூடியது, அசத்தியம் நிர்மூலமாகக்கூடியது! ஆம்!! அசத்தியம் நிர்மூலமாகக் கூடியதே!!!*

*அதற்கு புயலை காவு கொண்ட அமைதி போல சாந்தமான மர்யமின் இந்த வாழ்வே சாட்சி!*

## என் பிறப்புக்கு நான் பெருமை சேர்க்க வேண்டும்!

*இலங்கையில் இருந்தபோது இஸ்லாத்தைக் குறித்து தெரிந்திருந்த எனக்கு சரியான வழிகாட்டுதல் இல்லாதிருந்தது என்று ஆதங்கப்படும் இந்த இளைஞன் தனது தாய் குவைத் நாட்டுக்கு வந்து இறையருளால் இஸ்லாத்தை ஏற்றதை எண்ணி பெருமைப்படுகின்றார்.*

*தாயின் முயற்சியால் அவர் குவைத்தில் மட்டும் நுழையவில்லை, மாறாக இஸ்லாம் ஒரு இனிய மார்க்கம் என்பதை உணர்ந்து அதற்குள் தானும் நுழைந்தார்.*

*அவர் மேலும் கூறுகையில், 'அன்பைத் தேடி அலைந்த எனக்கு, அறிவையும் சேர்த்துத் தந்தவன் ஏகஇறைவன் அல்லாஹ் மட்டுமே என்பதை உணர்ந்தேன். மனிதப்பிறவியாக என்னைப் படைத்து சிறப்பித்த அந்த ஏகனுக்கு நான் செய்யும் கைமாறு, என் பிறவிக்கு நான் பெருமை சேர்க்க வேண்டும், அதற்கேற்றவாறு எனது வாழ்வை இறைவழியில் செலுத்த வேண்டும்! என்கிறார் இலங்கையைச் சேர்ந்த இந்த முன்னாள் 'தங்கராஜ தனுஜன்'என்கின்ற இன்றைய முஹம்மத் முஸ்தபா*

*-இளவேனில்*



# இலங்கும் இலட்சியப்பிம்பம்..!



*இன்றைய உலகம் இஸ்லாத்தின் தனித்துவத்தைத் தகர்த்தெறிவதற்காக பலதரப்பட்ட கருத்துக்களாலும் கொள்கைகளாலும் அதனை சிதைத்து வருகின்றது, அச்சிதறல்களை உலக விளிம்புகளிற்கெல்லாம் சித்தரித்துக் காட்டுவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றன, அனைத்துவிதமான பிரச்சார ஊடகங்களும், இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளும்! வாளால் பரப்பப்பட்ட மதம், பலதாரமணம், பெண்களைப் மட்டுப்படுத்தி வைக்கும் மார்க்கம், கடுந்தண்டனைகள் கொண்ட கொடூர மார்க்கம் இத்யாதிகளுடன் அம்மார்க்கத்தை தூற்றுகின்றனர்.*

*நம் மத்தியில் இதன் பாதகப்பக்கங்களை மட்டும் படித்து விட்டு சாதகங்களைப் புரட்டிப்பார்க்காமல். எத்தனையோ நெஞ்சங்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். சாதகத்தின்பால் தன் பிம்பத்தை நிழலிடச் செய்த ஒரு தாரகையிடம் பேசியபோது...*



ஆம்! இன்றைய சுமய்யா ஆகிய நானும் முன்னர் அத்தகைய தவறான அபிப்ராயங்களால் புடம் போடப்பட்ட ஒருத்தி!! கிறித்துவத்தின் மூலம் நான் கொள்ளை கொள்ளப்பட்டு தேவாலயங்களில் என் வாழ்க்கைக்கோடுகளை வண்ணங்களின்றித் தீட்டிக்கொண்டிருந்தேன். வறுமையை வழக்கொழிக்க குவைத் நாட்டிற்கு அடியெடுத்து வைத்தேன். முஸ்லிம்களுக்கு மத்தியில் என் வாழ்க்கைத்துளிகள் கரைந்து கொண்டிருப்பதைக் கண்ட என்னுள்ளம் தினமும் அழுதது. நானுண்டு என் வேலை உண்டு என்பதாக அவர்களுடனான என் தொடர்பைக் குறைத்துக் கொண்டேன்.

இறைநாட்டத்தை எவரால் மாற்ற முடியும்?

அதே வீட்டினுள் பணி புரிந்தனர் ஒரு தம்பதியினர். அவர்கள் தமது கொள்கையை மேன்மையுடன் நினைத்தது மட்டுமல்ல, அதனை கிஞ்சிற்றும் பிசகாமல் தம் வாழ்க்கைநெறியாக ஏற்று வாழ்ந்து கொண்டிருந்தனர்.தூய இறையுணர்வு கலந்த அக்கொள்கை அவர்களது வாழ்க்கையின் இலக்கை இலங்கச்செய்து கொண்டிருந்தது.

காலம் அதற்கே உரிய வரையறையில் கடந்து கொண்டிருந்தது. அதேவேளை அவர்களுடனான என் தொடர்புகள் கணமாகி, ஆக்கபூர்வ இரணமாகி, சிறிது சிறிதாக அக்கொள்கை ஆழத்திற்குள் இறுக்கமாகி, பின் அதில் நான் மூழ்கடிக்கப்பட்டு போனேன். அது பற்றிய தேடல்கள் என்னுள் தொடர்ந்து அரங்கேற, நான் அதன் சிகரத்திற்கே போய்விட்டேன்.அத்தூய கொள்கையின் ஒவ்வொரு கட்டத்தின் வாழ்க்கை முறைகளும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. முழு உலகத்தையும் அணிப்படுத்தக்கூடிய தத்துவார்த்தமான வாழ்க்கை நெறிமுறை இது மட்டுமே என்று திடமாக உறுதி பூண்ட நான் ஏற்கனவே ஏற்றிருந்த கண்மூடித்தனமான என் கொள்கையை விட்டும் தூரமானேன்.

பூரண உறுதியுடன் என் மனம் ஏற்றது இஸ்லாத்தை! என் இதயம் சுவாசித்தது ஏகத்துவக்கொள்கையை! தற்போது நான் ஓரிறைக் கொள்கை மீது மட்டுமே நம்பிக்கை கொண்டு ஒவ்வொரு நாழிகையும் அதன் நிழலில் என் சுவாசத்துடிப்புக்களை மலரச்செய்து கொண்டிருக்கிறேன். இப்போது என் அவாக்களும் துஆக்களுமாக இருப்பது ஒன்றே ஒன்றுதான்! என்னைச் சார்ந்த என் குடும்பத்தினரை இதன் பால் இணையச் செய்வதே!

இறை நினைவின் குளுமையில் நித்தமும் இத்தகைய இறையச்ச பிமபங்கள் எந்நாளும் செறிந்திருக்கட்டும். அதற்கு இறை உதவி என்றும் துணை நிற்கட்டும், அந்த ஏகஇறை நாடினால்...!

## முஸ்லிம்களைப் பார்க்கவில்லை.., இஸ்லாத்தைப் பார்த்தேன்..!



'முஸ்லிம்கள் அனைவரும் கெட்டவர்கள் அல்லர், கெட்டவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் அல்லர்!" என்று தத்துவார்த்தமாகப் பேசும் இந்த துடிப்பான இளைஞன் பல்வேறு எதிர்ப்புக்களுக்கிடையில், வரதட்சணை மலிந்த அருடைய சமூகத்துக்கு சிறிதும் தலைவணங்காது முற்றிலும் இஸ்லாமிய முறைப்படி திருமணம் முடித்தவர்!

“ஆரம்பத்தில் நான் குவைத் வந்தபோது முஸ்லிம்கள் மீது சொல்லொண்ணா வெறுப்பு எனக்கு! ஆனால் இஸ்லாமிய இயக்கத்தோடு தொடர்புடைய ஒருசில முஸ்லிம் நண்பர்களின் துணை எனக்கு நல்ல இஸ்லாமிய நூல்களை ஆருயிர்த் தோழனாக்கியது. முஸ்லிம்களைப் பார்க்கவில்லை, இஸ்லாத்தைப் பார்த்தேன்.படித்தேன், தெளிந்தேன்! இறைவழிகாட்டுதல் என்னை ஆரத் தழுவிக்கொண்டது. IPC என்னை புடம் போட்டு மிளிரச் செய்தது!" என்று புளங்காகிதம் அடைகின்றார், சரவணன் என்கின்ற முஹம்மத் ஸமீர்.

ஓய்வுநேரங்களில் மட்டுமல்லாது, பணிநேரங்களில் கிடைக்கும் இடைவேளைகளின்போதும் அவருடைய பொறுப்பாளர் அனுமதியுடன் அழைப்புப்பணியாற்றும் இந்த இளம்புயல் இஸ்லாமிய நிலையம் ஆரத்தழுவிய புதிய இஸ்லாமிய முத்துக்களில் அரிய முத்து!

*-இளவேனில்*

இரண்டு கட்டுரைகளையும் வடித்து தொகுத்தவர்: *பின்த் அன்ஸார்*



*ரவ்தா*

# கவுரவ ஆண்டு விழா!





மகளிருக்கு மார்க்க பயிற்சி நெறிமுறைகள் போதிக்கும் வகுப்புக்கள் இஸ்லாமிய நிலையம் - IPC மகளிர்ப் பிரிவு, ரவ்தா-வின் பாடசாலைத்துறையினரால் தொடர்ந்து நடத்தி வரப்படுகின்றது. இவ்வருட இறுதியாண்டு வகுப்புக்கள் செம்மையுற நடைபெற்று முடிவடைந்தன. இதில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த பல மொழிகளைச் சார்ந்த மாணவியர் கலந்து கொண்டு பயன் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குரிய பிரத்யேக கவுரவ விழா, கடந்த ஏப்ரல் 27-ஆம் தேதி ரவ்தா, IPC அலுவலக செவியரங்கத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. புகழனைத்தும் இறைவனுக்கே!

பாடசாலைத் துறை தலைவி *லதீ∴பா ஸாஃத்* தலைமையில் நடந்த இவ்விழாவில் திருக் குர்ஆன், முஹம்மத் (ஸல்) அவர்களின் வரலாறு, இஸ்லாமியக் கோட்பாடு, தஜ்வீத்-திருக் குர்ஆன் ஓதும் கலை, நபிமொழி நாற்பது, இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் ஆகிய பாடங்களை சிறப்பாக நிறைவு செய்த 30 தமிழ் சகோதரிகளுக்கு சான்றிதழ்களுடன் பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும் சிங்கள மொழி மூலம், பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்ட ஏறக்குறைய 50 சிங்கள சகோதரிகளுக்கு சான்றிதழ்களுடன் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியை சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்துவதில் பாடசாலைத் துறை செயலாளர் சகோதரி *ஷய்மா தியாப்*, தமிழ் மற்றும் சிங்கள மொழி சார்ந்த இஸ்லாமிய அழைப்புப்பணி சகோதரிகள் *∴பர்ஸானா ர∴பீக், ஸினூ∴பா அன்ஸார், ஸூல்∴பிகா மன்ஸூர், ஷர∴புன்னிஸா ∴பாரூக், ஆயிஷா ∴பாலிஹா ∴பாரூக் மற்றும் உமைரா* மற்றும் மகளிர் பிரிவுச் சகோதரிகள் பெரும் பங்காற்றினர்.

-ரவ்தாவிலிருந்து *ராபிதா*

---

*தலைமையகம்*

# கப்த் கிளைக்கு சிறப்பு பயணம்!

IPC தலைமையக அழைப்புப் பணியாளர்கள், கப்த் கிளைக்கு சிறப்பு பயணமாக சென்றுவந்தனர். கப்த் முழுவதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த, வெவ்வேறு மொழிகள் பேசுவோர் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர். அதில் *அப்துல் முஸவ்விர்* (தமிழ்,ஆங்கிலம்), *∴பைஸல் முஹம்மத்* (சிங்களம்), *ஸையத் அப்துஸ் ஸலாம், முஹம்மத் பிலால்* (தெலுகு), *ஸ∴பாத் ஆலம்* (ஹிந்தி), *கரமுல்லாஹ்* (நேபாளம்), *ஏஜாஸுத்தீன்* (கன்னடம்), *முஹம்மத் ஷாநவாஸ்*(ஹிந்தி),*மாமூன் ரஷீத்* (பங்காலி) ஆகியோருடன் கப்த் கிளை சார்ந்த *அப்துர் ரஸாக்* (மலையாளம்), *முஹம்மத் இநாயதுல்லாஹ்* (பங்காலி) ஆகியோர் இப்பணியில் சிறப்பாக ஈடுபட்டனர்.பின்னர், தலைமையக அழைப்புப் பணிப் பிரிவுத் தலைவர் *அஷ்ஷேக் அஜீஸ்-அல்-ஷம்மரி* அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கப்த் துறை மேலாளர் *அஷ்ஷேக் அப்துர் ரஹ்மான் கஸீர்* செய்திருந்தார்.

குளிர்சாதன அறையில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் வழக்கமான பணிமுறையிலிருந்து சற்று விலகி, குவைத் பாலைவனத்தின் தகிக்கும் வெயிலில் பணியாற்றிக் கொண்டிருக்கும் எமது சகோதரர்களின் பணிமுறைகளைக் கண்டு வந்ததும் அவர்களுடன் ஒரு நாளை பகிர்ந்து கொண்டதும் ஒரு புதிய அனுபவம். வல்ல இறைவனின் அருள் என்றும் நம் அனைவர் மீதும் பொழிய பிரார்த்தித்துக் கொண்டு தலைமையகக் குழு மாலை குவைத் நகரம் திரும்பியது.

-தலைமையகத்திலிருந்து *இளவேனில்*







சால்மியா

# சிறப்பு பட்டமளிப்பு விழா!











IPC , சால்மியா , பெண்கள் பிரிவு சார்பாக மகளிருக்கு மார்க்க பயிற்சி நெறிமுறைகள் போதிக்கும் வகுப்புக்கள் மற்றும் அரபிமொழி பயிலும் வகுப்புக்கள் தொடர்ந்து நடத்தி வரப்படுகின்றது. இதில் தமிழ் உள்ளிட்ட பல்வேறு மொழிகளைச் சார்ந்த சகோதரிகள் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

இவ்வருட வகுப்புக்கள் சிறப்பாக நடைபெற்று முடிவடைந்ததற்கான கவுரவ விழா, IPC , சால்மியா , பெண்கள் பிரிவில் நடைபெற்றது. இதில் 100-க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டனர்.

IPC, சால்மியா , பெண்கள் பிரிவு மேலாளர் சகோதரி லைலா அஸ்-ஸக்ர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் புதிதாக இஸ்லாத்தை ஏற்ற சகோதரிகள் தமது அறிவை மென்மேலும் வளர்த்துக்கொள்ள அழைப்பு விடுத்தார். அவர் மேலும் பேசுகையில், அண்ணலார் (ஸல்) அவர்களின் நடைமுறைகளை உண்மையாக பின்பற்றுவதன் மூலம் மட்டுமே இஸ்லாத்துக்கும், முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் எதிராக பரப்பப்படும் அவதூறுகளுக்கு பதிலடி கொடுக்க முடியும் என்றும் கூறினார்.

புதிதாக இஸ்லாத்தை ஏற்ற தமிழகத்தைச் சேர்ந்த மெர்ஸி என்ற ரஹ்மா தான் இஸ்லாத்தை ஏற்ற வரலாற்றை எடுத்துரைத்தார்.

சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்குதலுடன் விழா இனிதே முடிவுற்றது. விழாவில் சகோதரி ஷகீரா பஷீர் (தமிழ்,சிங்களம்) உள்ளிட்ட பல்வேறு மொழிகள் சார்ந்த இஸ்லாமிய அழைப்புப்பணி சகோதரிகள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர்.

- சௌந்தர்யம்




அன்னையர் தினம்

# தாயே......!!!

கவிதை



ஸினூ.ஃ.பா
அன்ஸார்

தாத்பரியப்படுத்தினாய்.
தரணியில் - என்பிறப்பை !

உன் வார்த்தைக்கு
அகராதியில் அர்த்தம் இல்லை.
என் வாழ்க்கை அர்த்தப்பட்டது
உன்னாலென்பதால்,

எல்லாமே எனக்கு
வார்த்து தந்து விட்டு
இன்னும் இழப்பதற்கு உன்னிடம் என்ன
மீதி??????

உன் அன்பால்
சலவை செய்யப்பட்ட
என் மனம் - இன்னும்
உணர்கிறது
உன் வாசத்தை.

கண்ணீர் மழையில் நீ
நனைந்து
வெந்நீர் குளியல்
தந்தாய் - என் பிணிக்கு.

உன் பசிக்கு எதையும் நீ
உண்டதில்லை. - ஏனெனில்
உன் பசியை நீ மறந்து
என் பசியையே நீ நினைவில் கொண்டதால்,,....

மேடு பள்ளங்களை
உன் வாழ்வில் சமதரையாக்கினாய்
என் பாதங்கள் புண்படாதிருக்க !

எல்லா நல்லவைகளையும் - என் வாழ்வில்
வடிகட்டி விட்டு
எஞ்சும் மிச்சங்களானாய்.....
இறுதியில்
உன் உன்னத உயிரும்
மிஞ்ச வில்லையே எனக்கு!

தாயே !!!
தாத்பரியப்படுத்தினாய்.
தரணியில் - என்பிறப்பை !

உன்னைப் போன்ற
ஒரு உறவை
மண்ணில் நான் காணவில்லை இன்னும்.
உன்னுடன் வாழ்ந்த
அந்த நினைவுகளின் பசுமையையும்
மண்ணில் நான் உணர வில்லை இன்னும்!

நிஜமாக - இன்னும்
உன் மடி தேடும்
ஒரு மழலையே
நான்!!!!!!

உறவுகளின் சிறுமையும்,
உணர்வுகளின் வெறுமையும் - என்
உயர்வைகளில் கூட ஒரு தாழ்வையும்
உலகப் பொருட்களில் உன் உன்னதத்தையும்
இப்போதுதான் உணர்கின்றேன்
தாயே!!!!!
இத்தரையில் உன்னை நான் இழந்த போது...!

இருப்பினும்
இன்பச்சுவனத்தின்
இருப்பிடம் - உன் காலடியில்
இருக்கிறதென்பதை
இத்தால் அறிகிறேன்.

இகபரத்திலும் நீயே -என் தாயே!!

முதலாண்டு சிறப்பிதழ்

*முஸ்லிம் மகளிர் படித்தரங்கள்: 8*

# செல்வத்தின் மாயையா....? மார்க்கத்தின் மேன்மையா...?

*எழுத்து*

*ஸகீனா மணாளன்*

**த**னது கணவனைத் தேர்ந்தெடுப்பதில் மிகச்சிறந்த பண்புநலன், தொலைநோக்குப் பார்வை, விழுமிய பேரார்வம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு முஸ்லிம் தாரகையைக் காண்போம்.

முதன்முதலாக இஸ லாத்தை ஏற்ற மதீனாவாழ் (அன்ஸாரிப்) பெண்களுள் ஒருவர், உம்மு ஸுலைம் பின்த் மில்ஹான் என்பவர். மாலிக் இப்னு நாதர் என்பவருக்கு மணமுடித்து அனஸ் எனும் குழந்தைக்குத் தாயானார். இவர் இஸ்லாத்தை எற்றவுடன் கடுஞ்சினமுற்ற மாலிக் இவரை விட்டு சென்றுவிட்டார்.பிறகு அவருடைய மரணச்செய்திதான் அவருக்குக் கிடைத்தது. அவ்வமயம் அவர் இளமைப்பருவத்தின் வாயிலைக்கூட கடக்கவில்லை. தனது மகனை முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு சேவகம் செய்யவும் அனுப்பி வைத்துவிட்டார்.

இவ்வேளை உம்முஸுலைம் பற்றி கேள்விப்பட்டு, மதீனாவின் அழகுக் குமாரர்களில் ஒருவரும், பெரும் செல்வந்தரும், வீரமும் தீரமும் நிறைந்த அபூதல்ஹா என்பவர் (இஸ்லாத்தை எற்காத நிலையில்)- அன்னாரை மணமுடிக்க நாடி அவர் கைகேட்டு வந்தார். அபூதல்ஹாவின் தகிக்கும் அழகிலும், கொழிக்கும் செல்வத்திலும் மயங்கி உம்மு ஸுலைம் அவரை மணமுடிக்க சம்மதிப்பார் என நினைத்தனர் அபூதல்ஹாவுக்காக ஏங்கிக் கொண்டிருந்த மதீனாவின் பிற நங்கையர்!

ஆனால், நிலைமையோ வேறு! தன் கரம் கேட்டு வந்த அந்த மதீனத்து மங்கையரின் கனவுநாயகனை நோக்கி உம்மு ஸுலைம் கேட்டது என்ன தெரியுமா? “ஓ, அபூதல்ஹாவே! நீ வணங்கும் தெய்வம் எப்படிப்பட்டது தெரியுமா? நிலத்தில் வளரும் அதனை இந்த..இந்த.. கோத்திரத்தைச் சேர்ந்த அடிமைகள் வெட்டிப் பயன்படுத்துகின்றார்கள்.” அபூதல்ஹா பதிலளித்தார்: “ஆம்! அதற்கென்ன?”

உம்மு ஸுலைம், “ ... நிலத்தில் வளர்ந்து, அடிமைகளால் வெட்டப்படுகின்ற ஒரு பொருளுக்கு நீ சிரம் பணிகின்றாயே, உனக்கு வெட்கமில்லை?” என்று அச்சமின்றி கேட்டவுடன் அதிர்ந்து போனான் அபூதல்ஹா.

இருப்பினும் அவள் மீதிருந்த காதல் அவனை சாந்தமாக்கியிருந்தது. என்றாலும், அவளை விலையுயரந்த செல்வங்களின் மூலம் தனக்குரியவளாக்கிக் கொள்ளலாம் எனும் நப்பாசையில் மதீனாவாசிகள் வியந்து போகும் அளவுக்கு செல்வக்குவியலை அவளை மணமுடிக்க ஈடாகப் பேசினான். உற்சாகப்படவில்லை உம்மு ஸுலைம்! மாறாக இன்னும் உத்வேகத்துடன், “ஓ, அபூதல்ஹாவே! நீர் ஒரு இறைநிராகரிப்பாளன் ஆவீர்! நானோ நம்பிக்கையின் நிழலில் நிற்கும் இறைநம்பிக்கை பெண்மணி! இத்தகைய நிலையில். உம்மை மணமுடிக்க எனக்கு தடுக்கப்பட்டுள்ளது. (அதையும் மீறி) நீர் என்னை உம் வாழ்க்கைத்துணையாக்கிக் கொள்ள நாடினால், எனக்குரிய மஹர்-நீர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதே! அதனை விடுத்து வேறு எதனையும் நான் உன்னிடத்தில் எதிர்பார்க்கவில்லை!”

அடித்துப்போட்ட மாதிரி இருந்தது செல்வத்தின் அகங்காரத்தில்



இருந்த அபூதல்ஹாவுக்கு! எனினும் சுதாரித்துக் கொண்டவனாய் மேலும் மேலும் செல்வ வளத்தை அவள் முன் காட்டினான். அவளுடைய அழகும், அனுபவ அறிவுமே அவனது கண்ணை மறைத்துக் கொண்டிருந்ததே தவிர, செல்வம் அவனுக்கு பெரிதாகப்படவில்லை.

இறுதியாக, அந்த மரத்துப்போன மரக்கடவுளின் இயலாத தன்மையை மறுபடியும் அவனுக்கு நினைவூட்டியவளாய், “அந்த மரத்தை எரித்தால் அது எரிந்து சாம்பலாகிப் போகும்” என்றாள்! இப்போது சுரீரென்றது அவனுக்கு! ஆம்! “கடவுள் எரிந்துபோகக்கூடியவனா, என்ன?” வேறு சிந்தனையே போகவில்லை அபூதல்ஹாவுக்கு! உடனே மொழிந்தான்: வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை! முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் (இறுதித்)தூதர் ஆவார்கள்!

இப்போது, உம்மு ஸுலைம் தனது மகனாராகிய அனஸுக்கு உத்தரவிட்டார்: “ஓ, அனஸே! அபூதல்ஹாவுக்கு என்னை மணமுடித்து வைப்பாயாக!” அனஸ் சாட்சிகளைக் கொணர, வாழ்க்கை ஒப்பந்தம் இனிதே நிறைவேறியது!*

பாருங்கள்!

செல்வத்தின் செழிப்பில் திளைத்து நிற்கும் வாலிபனை மணமுடிக்க, நீ-நான் என்று போட்டி போட்டு நிற்கும் பேதையர் ஒருபுறம்! அந்த மணாளனே மனமுவந்து செல்வக்குவியலோடு மணமுடிக்க தன்னை நாடி வந்தபோதும் இறைநம்பிக்கையின் முன்பாக, அதனை துச்சமென மதித்து தலைநிமிர்ந்து நிற்கும் மார்க்க விழுமங்களின் சீர்மிகு சீமாட்டியாக உம்மு ஸுலைம் மறுபுறம்!

இன்றைய நாகரிக நங்கையரில் எத்தகைய முடிவை எடுப்பர்? வாழ்நாள் முழுவதும் வாழ்வளித்து வசதியின் வனப்பில் திளைக்கச் செய்யும் வாழ்வை விட்டுவிடுவார்களா? பத்தும் செய்யும் பணத்துக்கு மத்தியில் இன்று நம்பிக்கையின் கீற்றுக்கள் ஆங்காங்கே ஒரு சிலரிடத்தில் மங்கி வருகின்றனவே!

இருந்தாலும், செல்வத்துக்கு முன் சாயாமல் அத்தகைய உணர்வுகளுக்கு சங்கு ஊதி, இறைநம்பிக்கை வாசத்தைத ஆரத்தழுவும் உம்மு ஸுலைம்கள் இன்றும் இருக்கத்தான் செய்கின்றனர்.

* *ஆதாரம் மற்றும் விரிவான விளக்கங்களுக்கு பார்க்க ஃபத் - அல் - பாரி, 9/395, கிதாப் அத் - தலாக், பாப் அல்-குல். (அரபி மற்றும் ஆங்கிலம்)*

## எது எப்படியானாலும்....!!

*நீ பிறர் மீது பாசம் காட்டினால்*
*மனிதர்கள் அதனை சுயநலம் அந்தரங்க*
*உள்நோக்கம் கொண்டதாக எண்ணி*
*உன்னை குற்றஞ்சாட்டுவார்கள்!*
*எது எப்படியானாலும்*
*பிறர் மீது பாசமுடையவனாக இரு!*

முதலாண்டு சிறப்பிதழ்



எழுத்து



பைஸல் முஹம்மத்

சென்ற இதழ் தொடர்ச்சி..

நான் திருக்குர்ஆன் பேசுகின்றேன்!
2



# முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானவனா, நான்?

அல்லாஹ்வைத் தவிர வேறொருவரையும் வேறெதையும் வணங்குவதோ, வழிபடவோ கூடாது. தனித்த இறைவன் ஏக நாயகன் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் என்று மக்களுக்கு அழைப்பு விடுத்தவுடன் மக்காவின் சிலை வணக்க சமூகமே திடுக்கிட்டுப் போயிற்று. நிராகரிப்பு, கருத்து முரண்களால் மட்டுமல்ல, வெறுப்பு, விரோதம், கொந்தளிப்புகளாகவும் நிரம்பிப் போனது.

இறைமறையாகிய நானோ மனித குலத்திற்கு கருணையாகவும் நேர்வழிகாட்டியாகவும் அருளப்பட்டேன். எனினும், இறையச்ச உள்ளத்தோடு, நிதானமாக அலசி ஆராய்ந்து சிந்தித்து உணர்ந்து என்னையும் பெருமானாரையும் ஏற்று நேர்வழி பெற்றோர் ஆரம்பத்தில் வெகு சிலரே! நீங்கள் ஒன்றை அறிந்துகொள்ள வேண்டும்! ஏதோ ‘எழுதப்பட்ட’ இயற்றப்பட்ட புத்தகம் அல்ல நான். கருத்துக்களை ஒப்புக்கொள்ளவோ, அல்லது படித்தோ, படிக்காமலோ தூக்கி போடுவதற்கு மற்ற நூல்களை போல ஒரு நூல் அல்ல நான்! உண்மையில் உலகைப் படைத்து அதனை ஆளக்கூடியவனால் அளிக்கப்பட்ட கட்டளையே நான்!

மேலும், பூமியின் ஒரு 'குறிப்பிட்ட இனத்தவரோ, குறிப்பிட்ட சமூகத்தினரோ அல்லது குறிப்பிட்ட மொழியினரோ மட்டும் சொந்தம் கொண்டாட" நான் இறக்கியருளப்படவில்லை. மாறாக மானுட சமூகம் முழுவதற்கும் நான் பொதுமறையாக இறக்கி அருளப்பட்டுள்ளேன்.

உலக மக்கள் அனைவரையும் அச்சமூட்டி எச்சரிக்க வேண்டும் என்பதற்காக ஃபுர்கானாக அதாவது, சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்தறிவிக்கக்கூடியதாக என்னை தன் அடியார் மீது இறக்கியருளியவனாகிய என் எஜமானனாகிய அல்லாஹ் எத்துணை வளமும் பாக்கியமும் உடையவன்!மனிதசமூகம் முழுவதற்கும் பொதுவானதாகவும் பொதுமறையாகவும் அருளப்பட்ட பாக்கியம் என்னைத்தவிர வேறு எந்த வேதத்திற்கும் கிடைக்காதது.

மேலும், நான் இறைவனிடமிருந்து வந்த இறுதி வேதமாவேன். என்னுடன், வேத வெளிப்பாடும் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய தூதுத்துவமும் முற்றுப்பெற்று விட்டன.

எனவே நான் எல்லாக் கோணங்களிலும் முழுமையான நிறைவான வழிகாட்டி ஆவேன். மனிதனுடைய வாழ்க்கைப் பயணத்திற்கான நேரிய பாதையை, சிந்தனையை சாந்தப்படுத்தும் அழகிய நெறி முறையை என்னை நம்பி வழிபடுவதிலிருந்து மட்டுமே ஒவ்வொருவரும் பெறமுடியும்.

இன்னும் இறைவேதமாகிய நான் என்னை பற்றி திடமாகக் கூற வேண்டியது இன்னும் உள்ளது. ஓ! மானுடனே எனக்குள் நீ உள்ளாய், உனக்குள் நான் உள்ளேனா? உன்னை நான் அறிவேன், என்னை நீ அறிவாயா?

*இறைவன் நாடினால் மீண்டும் உங்களை சந்தித்து இதுகுறித்து உரையாற்றுகின்றேன் அடுத்த இதழில்..!*



# சிறந்த சமூகம் எது?

எழுத்து



முஹம்மத் முனீர்

ஆதி மனிதன் ஆதம் (அலை) அவர்கள் தொடங்கி இந்த உலகம் அழியும் வரை வாழ்கின்ற மனிதன் வரை பல்வேறு இறைத்தூதர்கள் உலகில் தோன்றி மனிதகுலத்துக்கு வழிகாட்டி மறைந்துள்ளளார்கள். இவர்கள் சில இறைத்தூதர்களின் பெயரை மட்டும் திருக்குர்ஆன் பதிந்து வைத்துள்ளது.

ஆதம் (அலை) தொடர்ந்து நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வரைக்கும் வாழ்ந்த சில முக்கியமான நபிமார்களின் வாழ்க்கையையும் மிகவும் சுருக்கமாக வரையப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் முக்கியமான ஒருவராகிய நூஹ்(அலை) அவர்கள் தனது தூதை எத்தி வைப்பதில் சொல்லொண்ணா துன்ப துயரங்களுக்கு ஆளானார்கள். எனினும், அவரது சமூகத்தை விளித்து அல்லாஹ் உங்களது சமூகம்தான் சிறந்தது என்று குறிப்பிடவில்லை.

அதே போல், நம்ரூத் மன்னனின் அடக்குமுறை ஆட்சிக்குள் சிக்கி, நெருப்பு கிடங்கையும் சந்தித்து தனது இளம் பாலகனையும் மனைவியையும் மனித நடமாட்டம் அற்ற, வாழ்க்கைக்கு ஏற்புடையற்ற ஒரு பாலை பிரதேசத்தில் தனியாக விட்டு, தனது மகனை இறை ஆணையின்பால் தனது கரத்தால் பலிகொடுக்க துணிந்த, இது போன்ற இன்னும் பல இன்னல் கஷ்டங்களை சந்திக்க நேர்ந்த இப்ராஹிம் (அலை) அவர்களது சமூகத்தை பார்த்து இறைவன் நீங்கள்தான் சிறந்த சமூகம் என்று குறிப்பிடவில்லை.

மேலும், கொடுங்கோலன் ஃபிர்அவ்னின் அநியாய ஆட்சிக்கு முன்னால் சொல்லொண்ணா துன்ப துயரங்களை தனது இளமைப்பருவம் முதல் சந்தித்தார். தனது சமூகத்தின் மூலமாக பல்வேறுபட்ட துன்ப துயரங்களை எதிர்கொண்டு தனது மார்க்கத்தை பாதுகாப்பதற்காக வேண்டி நாடு துறந்து சென்றார். இவ்வாறு, தனது பிரசாரப் பயணத்தை மேற்கொண்ட மூஸா (அலை) அவர்களின் சமூகத்தை பார்த்தும் அல்லாஹ் சிறந்த சமூகம் என்று குறிப்பிடவில்லை.

மாறாக, அல்லாஹ் உலகின் இறுதிநபியாக தோன்றிய நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகமாகிய நம்மை பார்த்து திருக்குர்ஆனில் குறிப்பிடுகிறான் "நீங்கள் உலகில் மனிதர்களுக்காக வெளிப் படுத்தப்பட்ட சமூகங்களில் சிறந்த சமூகமாக காணப்படுகிறீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகிறீர்கள் தீமையை தடுக்கிறீர்கள். அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கிறீர்கள்."

பாருங்கள்! ஆதம் (அலை) முதல் இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை ஏறக்குறைய 1,24,000 நபிமார்கள் உலகில் தோன்றியுள்ளார்கள். இந்த அனைத்து இறைத்தூதர்களின் சமூகங்களிலும் சிறந்த சமூகமாக, நம்மை தேர்ந்தெடுத்தது ஒரு மாபெரும் அருள் என்பதில் சந்தேகம் இல்லை. நாம் சிறந்த சமூகமாக விளங்க காரணம், நன்மை ஏவி தீமையை தடுத்து மிகப்பெரும் நபிமார்கள் செய்த பிரச்சார பணியை மேற்கொள்வதாகும். நாம் எப்போது அப்பணியை செய்கின்றோமோ அப்போதுதான், நாம் சிறந்த சமூகம் என்பதில் சந்தேகம் இல்லை. எனினும் நாம் அதனை செவ்வனே நிறைவேற்றாத போது அந்த சிறந்த சமூகம் என்ற பட்டத்துக்கு நாம் உரிமை கொண்டாட முடியுமா, என்ன?

இன்று உலகில் அசத்தியத்தை சுமந்த எத்தனையோ சமூகங்கள் தமது அசத்திய கொள்கையை பரப்புவதில் திட்டமிட்டு வேகமாக செயல்படும்போது, சத்தியத்தை சுமந்த முஸ்லிம்களாகிய நாம் அதனை எமது முஸ்லிம் அல்லாத சகோதரர்களுக்கு கொண்டு செல்லாது தான்தோன்றித்தனமாக வாழ்கின்றோம். நம்மை சிறந்த சமூகம் என்று கூறுவதற்கு அடையாளமா என்ன, இத்தகைய வாழ்க்கை?

சிறந்த சமூகமாக இருக்க வேண்டுமாயின் சத்தியம் எனும் நன்மையை ஏவி அசத்தியம் எனும் தீமையைத் தடுப்பதில் திட்டமிட்டு செயல்பட வேண்டும். அப்போதுதான் உலகில் தலைசிறந்த சமூகமாக விளங்க முடியும். இன்று நமது பின்னடைவுகளுக்கும் மாபெரும் பிரச்னைகளுக்குமான அடிப்படை காரணி மிக முக்கியமான அழைப்புப்பணி எனும் சத்தியப் பிரச்சாரத்தில் பாராமுகமாக இருந்துவிட்டதே! எனவே தடைகள் ■

## எது எப்படியானாலும்....!!

*நீ நேர்மையானவனாகவும்*
*திறந்த மனத்துடையவனாகவும் இருந்தால்*
*மனிதர்கள் உன்னை எளிதில் ஏமாற்றி*
*விடலாம்.எது எப்படியானாலும்*
*உண்மையானவனாகவும் கள்ளம்*
*கபடமற்றவனாகவும் இரு!*



# கறைவாழ்வை நிறைவாக்கும் இறையச்சம்!

கவிதை



ஷகீரா பஷீர்

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இறையச்ச உணர்வு தேவையானதாக இருக்கின்றது. ஒருவனிடம் இறையச்ச உணர்வு இல்லாதுபோகும் வேளையில் அவன் இவ்வுலக இச்சைகளுக்கு அடிமைப்பட்டு பாவங்களால் சூழப்படுகின்றான். நமது பார்வைக்கு இறைவன் தென்படாவிட்டாலும், எம்மை எவ்வேளையிலும் அவன் கண்காணித்துக் கொண்டிருக்கின்றான் எனும் உணர்வு நமக்குள் உணர்த்தப்படும்போது இறையச்ச நிலையை நாம் அடைந்து கொள்ளலாம்.

இவ்வுலக வாழ்வில் மனிதர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறிச் செல்வது அதன் இன்பங்களுக்காகத்தான் இருக்க முடியும் என்பது வெளிப்படை! நமது கண்கள் காண முடியாத, செவிகள் கேட்க முடியாத - விலைமதிப்பற்ற சுவனத்தை பெறவே நம்மிடையே போட்டிகள் இருக்க வேண்டுமே அன்றி உலக இச்சைகளுக்காக அல்ல!

சரி! அந்த சுவனத்தை இலேசாகப் பெற்றுக்கொள்ள முடியுமா?ஏன் முடியாது? தீமைகளின் அனைத்து வாயில்களையும் அடைத்து விடும் "தக்வா" எனும் இறையச்சமே அதனை இலேசாகப் பெற்றுக்கொள்ள உதவும் விலைமதிப்பில்லா ஊடகமாகும்! இதனைக் குறித்து திருக் குர்ஆன் இவ்வாறு நவில்கின்றது:-

*இறைவனிடமிருந்து வழங்கப்படும் மன்னிப்பு மற்றும் சுவனத்தின் பக்கம் (செல்லும் பாதையில்) விரைந்து செல்லுங்கள்! அது வானங்கள் மற்றும் பூமியின் அளவிற்கு விரிவானது. மேலும், இறையச்சமுடையோருக்காகத் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. (3:133)*

இந்த வசனத்தில் இறையச்சத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு சுவனம் தயார்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. திருமறையில் இறையச்சம் என்பதற்கு மூன்று விதமான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

1. கஷ்யா எனும் இறையச்ச அம்சம்!

இந்தக் கருத்திலே பின்வரும் திருக் குர்ஆன் வசனம் அமைகின்றது:

*நீங்கள் அல்லாஹ்வின்பால் மீட்கக் கூடிய மறுமை நாளை பயப்படுங்கள். (2:281)*

2. வணங்குதல்-வழிபடுதல் என்ற கருத்தில் அமைந்தது.

இந்தக் கருத்து பொதிந்த பின்வரும் திருக் குர்ஆன் வசனம் இதுவே:-

*இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். மேலும், நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணமடைய வேண்டாம்! (3:102)*

3. பாவங்களிலிருந்து உள்ளத்தை தூய்மைப்படுத்துதல்!

இதன் பொருள் இதுவே:- முன் செய்யாத ஒரு பாவத்தை எப்போதும் செய்யாமல் அதிலிருந்து முற்றிலும் நீங்கியிருப்பதற்காக உள்ளத்தை தூய்மைப்படுத்துவது!

இதனை திருக் குர்ஆன் இவ்வாறு வருணிக்கின்றது:-

*யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிந்து, அல்லாஹ்வுக்கு அஞ்சி அவனுக்கு மாறு செய்வதைத் தவிர்த்துக் கொள்கின்றார்களோ, அவர்கள்தாம் வெற்றியாளர்களாவர்.(24:52)*

இறையச்சம் ஒரு மனிதனை எந்நிலையிலும் இயக்கிக்கொண்டிருக்க வேண்டும், அவன் தனிமையில் இருந்தாலும் சரி, கூட்டாக மக்கள் மத்தியில் இருந்தாலும் சரியே!'இறையச்சம் இங்கேதான்!' என நபிகளார் (ஸல்) அவர்கள் இதயப்பகுதியை சைக்கினை காட்டி கூறினார்கள். இறையச்சத்தின் உச்சகட்ட தாத்பரிய அம்சத்தை இஸ்ராயீலின் வழித்தோன்றல்களைச் சேர்ந்த மூன்று மனிதர்களுடைய வரலாற்றைக் கொண்டு விளக்கலாம்!

அந்த சமுதாயத்தை சேர்ந்த மூன்று மனிதர்கள் ஒருமுறை குகை ஒன்றின் வாயிலில் சிக்கிவிட்டனர். அதன் வாயிலை மூடிய கற்பாறையை அகற்றி வெளியேறுவதற்கு எந்த வழியும் இல்லாதிருந்தது. அப்போது ஒவ்வொருவரும் தத்தமது வாழ்வில் செய்த நற்செயல்களை எடுத்துக் கூறி இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்தார்கள்.

முதலாமவர் ஆடுகளை ஓட்டிக் கொண்டு தாமதாக வீடு திரும்பிய போது பெற்றோர் விழுத்தெழும் வரை பால்குவளையை கையில் ஏந்திய வண்ணம் விடியும் வரை அவர்களின் காலடியில் காத்திருந்தார். தனது மனைவி மக்களின் பசியை போக்குவதைவிட, பெற்றோருக்கு முன்னுரிமை வழங்கினார். எனவே அவர் செய்த பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டு, பாறை சற்று விலகியது.

இரண்டாமவர் விபச்சாரம் செய்ய ஒரு பெண்ணை நிர்ப்பந்தித்தான். அவளை நெருங்கியதும் "அல்லாஹ்வுக்கு அஞ்சிவிடு!" என்று இதயஆழத்திலிருந்து அவள் சொன்னது அவனது இதயத்தில் ஈட்டி போல் பாய்ந்தது. அவனிடம் காணப்பட்ட தக்வா எனும் அந்த இறையச்சம் அவனது பிரார்த்தனைக்கு வடிவம் தந்தது. பாறை இன்னும் சற்று விலகியது.

முதலாளியாக இருந்த மூன்றாமவர் தன்னிடம் பணிபரிந்த தொழிலாளி, பல காலம் கடந்த பிறகு வந்து கூலி கேட்ட போது அவனது கூலியை மூலதனமாக்கி பெற்ற ஆடுகள், மாடுகள், ஒட்டகங்கள் என மந்தையையே அள்ளிக் கொடுத்தார். அவர் அமானிதத்தை பாதுகாத்தார். எனவே அவரது பிரார்த்தனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாறை முழுவதுமாக விலகியது. தக்வா எனும் இறையச்சம் நமது பிராாத்தனை ஏற்றுக் கொள்ளப் படுவதற்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது. எனவே நபிகளார் கூறியது போல உள்ளங்களுடன் உரையாடி இறையச்சத்தை வளர்ப்பதே வெற்றிப்பாதையாகும். அதற்கு இறையருள் துணை நிற்கட்டும்!

# அறிவுக் குறுக்கெழுத்து

## விதிமுறைகள்

1. இக்குறுக்கெழுத்துப் போட்டியின் பெரும்பாலான வினாக்களுக்குரிய விடைகளை “வசந்தம்” - ஏப்ரல் 2008 மாத இதழிலிருந்து பெற முடியும்.
2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்!
3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை!
4. பெயர், தொலைபேசி எண், குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. வெற்றியாளர்கள் 3 பேருக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.
7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது
8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி 3-ஆம் பக்கத்தில்) ஜீஊ தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 2400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது amusavir@gmail.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles - மினா பஜார்,மிர்காப் - SEEMATY, மிர்காப் - Peoples Restaurant, மிர்காப்- ABC Parcel மற்றும் Careem Lanka, மிர்காப் -Abraar-al-Deerah,Studio SriLanka, மிர்காப் - IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தூ | | 3 | | ■ | ■ | 7 | | 9 ஹ | ○ |
| | ■ | | கி | ■ | ■ | ■ | 18 | | ■ |
| | ■ | | 24 | ■ | 26 | | கா | | |
| | | 33 | ■ | 35 | லை | ■ | 38 | | |
| | ர | 43 | ■ | ■ | 46 ○ | 47 | | | |
| 51 | | 53 | ■ | ■ | | 57 | | வு | ■ |
| ■ | ■ | | ■ | ■ | | ப் | ■ | ■ | ■ |
| 71 | | | ■ | | | 77 | ■ | ■ | 80 |
| | ■ | 83 | ■ | 85 | | ○ | | ■ | 90 |
| | 92 ○ | ■ | 94 | வ் | 96 | ■ | 98 | ■ | 100 ரா |

## அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்!

### இடமிருந்து வலம்.

1. இறைத்தூதுத்துவம் கிடைக்கப்பெற்றவர்,இவ்வாறு அழைக்கப்படுவர்.(4) 7. வளைகுடா நாடு ஒன்றில் புழங்கும் பணஅலகுகளில் ஒன்று. (4) 26. ஒரு“காப்பு”!கைகளில் போடுவது அல்ல.(5) 31.“சுற்று”டன் இணைத்து கூறப்படும் சொல். வசந்தம் ஏப்ரல் இதழின் முகப்புக்கட்டுரையோடு தொடர்புடையது இங்கு குழம்பியுள்ளது. (3) 35. காய்ந்து போனால் உதிர்ந்து போகும். (2) 38. இதனைப் பேசுவது இறந்த சகோதரனின் இறைச்சியை உண்ணுவது போல் என்கிறது திருக்குர்ஆன் (3) 46. காலங்களில் ஒன்று. உங்கள் கரங்களில் மாதந்தோறும் தவழும் மாதாந்திரி.(5)

51. குவைத் ஜிலீப் பகுதியில் அமைந்த ஒரு இடம். கடைசி இரண்டெழுத்து பூட்டைத் திறக்க உதவும். (3)

57. முற்றும் துறக்கும் நிலை.இஸ்லாத்தில் இதற்கு அனுமதியில்லை.(3) 71.இஸ்லாம் தடைசெய்துள்ள பொருளாதார முறை.(3)

85. பெரும்பாலான நாடுகள் இன்னும் இவ்வாட்சி முறையைக் கொண்டுள்ளன.(4) 94. IPC-இன் மகளிர்ப் பிரிவு உள்ள இடம்.(3)

### வலமிருந்து இடம்.

28. உயிரினங்கள் கேட்கப் உதவுவது.(2) 43.கிழமை என்பதன் மற்றொரு பெயர்.(3) 53. பெரும்பாலான வெளிநாடுகளுக்குச் செல்ல இது அவசியம்.(2) 77. மனிதர்கள் சிலர் இதற்கு ஆசைப்படுவர்.(3) 92. சிலர் வாதிடுவதுபோல் வாழ்க்கை ஒரு --------அல்ல! கடைசி எழுத்து பேனாவில் ஊற்றப் பயன்படுவது (2)

### மேலிருந்து கீழ்

1. மீன் பிடிக்க உதவுவது. வசந்தம் ஏப்ரல் மாத கடைசிப்பக்க கட்டுரையுடன் தொடர்புடையது.(4) 3. மென்மையின் எதிர்ப்பதம்.(3) 9. தியாக உணர்வை வெளிப்படுத்தும் இஸ்லாமிய வணக்க வழிபாடுகளில் ஒன்று.(2) 26. அரேபிய தீபகற்பம் பெரும்பாலும் நிறைந்த பகுதி.(5) 43. நீர் நிறையும் பகுதி முதல்சொல் அழைப்பைக் குறிக்கும்.(2)

47. ஒரு நில வகை.(4) 53.- - - - பூச்சியா வாழ்க்கை.(4) 71. இதற்குப் பயந்து பெண் மக்களை உயிருடன் புதைத்தனர் ஒரு காலத்தில்.(3) 80. தூதரின் கொள்கையைத் தாங்கிப்பிடித்த எத்தியோப்பியப் பெண்.(3)

### கீழிருந்து மேல்

18. பஞ்சபூதங்களில் ஒன்று. (2) 24. அண்மையில் குவைத்தை கலக்கிய நாவலர். (3) 96. ---என்ற எண்ணம் கர்வத்தின் அடையாளம்.(2) 98. உலகம் என்பதைக் குறிக்கும். கண்களுடன் தொடர்புடையது.(2)

*அனைத்து விடைகளையும் நிரப்பிய பின்னர் வட்டமிட்ட சொற்களை ஒழுங்குபடுத்தினால் மனிதன் இறைக்கட்டளைப்படி இவ்வுலகில் வாழும் வாழ்க்கைக்கு மறுமையில் கிடைக்கும் நான்கெழுத்து பரிசு வரும்!*

☐ ☐ ☐ ☐

*பெயர்:*

*குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்*

Civil ID OR Passport No:

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

*தொலைபேசி:*

*வசிக்கும் இடம்:*

**பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 20.06.2008**

# இறைநியதியே நிரந்தரம் !!
# மனித சித்தாந்தம் எம்மாத்திரம்??

நவீனத்துவத்தை நோக்கி உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த காலகட்டம்! அடிமை சாசனம் எழுதி, உழைக்கும் அப்பாவி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த முதலாளித்துவ "கேப்பிடலிஸ"-த்துக்கு எதிராக கம்யூனிஸம் பிறந்தது.தங்களுக்குத் தோள் கொடுக்க வந்த தோழராக அந்த செம்படை கம்யூனிஸத்துக்கு சிவப்புக்கம்பளம் விரித்து வரவேற்றனர் தொழிலாளர் வர்க்கத்தினர்.

உலகவாழ்வின் பிரச்னைகளுக்கு உலகியல் ரீதியாக சிந்திக்க வைத்த கம்யூனிஸம் 6 முக்கிய (சொதப்பல்)கொள்கைகளை முன்னிறுத்தி உலகின் மாபெரும் அளவிலான தொழிலாள நடுத்தர வர்க்கத்தை தன்பால் திசைதிருப்பியது.

- இறைநிராகரிப்புக்கொள்கை
- வாழ்க்கை உலகாயதம் சார்ந்தது மட்டுமே,ஆன்மிக வாழ்வுக்கு எவ்வித பின்புல காரணமும் இல்லை
- தனிமனித பொருளுரிமை எதிர்ப்பு
- அனைத்து வள ஆதாரங்களையும் தேசியமயமாக்குதல்.
- பொது விநியோக முறை மூலமாக மட்டுமே பொருள் வர்த்தகம்.
- தகுதிக்கேற்றவாறு ஒருவனை அடையாளம் காணுவதை விட ஒருவனுடைய தேவைக்கேற்றவாறு அவனை கணிப்பிடு! - எனும் லெனினுடைய கூலிக்கொள்கையை அமுல்படுத்தல்.

இவ்வாறு மனிதனால் மனிதனுக்காக இயற்றப்பட்ட சித்தாந்தமாக இருந்ததால், கம்யூனிஸம் மனிதனை ஒரு பெரிய தொழிற்சாலையில் இயக்கப்படும் கருவியாக மாற்றியது.

ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும் உலகமே இறுதி இலட்சியமாக அமைந்திருந்ததால் அவனுடைய செயல்களுக்கான கூலி என்னவென்பதை இச்சித்தாந்தம் தரவில்லை.

ஒருபுறம் நியாயமாக ஈட்டிய செல்வத்தை தனிமனிதன் அனுபவிக்க முடியாதபடி பொது நலன் பேசிய கம்யூனிஸம் மறுபுறம். ஏழை நடுத்தர தொழிலாளர் வர்க்கத்தின் முழுமையான அடைதலையும் பூர்த்தி செய்ய முடியவில்லை.1989- இல் ருஷ்ய அதிபர் *மீகைல் கோர்பசேவ்* தனது கம்யூனிஸ கொள்கையை கிளாஸ் நாஸ்ட் Glassnost (புதிய தோற்றம்), பெரஸ்டோரிகா prestoreica (புனர்நிர்மாணம்) எனும் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்து கம்யூனிஸத்துக்கு சாவு மணி அடிக்க ஆரம்பித்தார். அதனால் தான் எந்த லெனின் கவர்ச்சியில் ருஷ்யா வீழ்ந்ததோ அதே ருஷ்யாவில் அவனுடைய சிலை பூங்கா ஒன்றில் உடைபட்டு கேட்பாரற்று கிடந்தது.சீனா, ஐரோப்பிய நாடுகள், இந்தியாவின் சில மாநிலங்கள் , நேபாளம் போன்ற கம்யூனிஸம் கோலோச்சிய இடங்கள் அந்தத் தத்துவத்துக்கே விடை கொடுக்க ஆரம்பித்துவிட்டன.



வருடந்தோறும் மே 1ஆம் தேதி தொழிலாளர் தினமாக போற்றி வரும் கம்யூனிஸம் இன்று வரை அவர்களின் அடிப்படை பிரச்னைக்குக்கூட தீர்வு காண முடியவில்லை. தீர்வு காணமுடியா பிரச்னைகளா அவை....? இல்லை.

பாருங்கள்! மனிதனைப் படைத்தவன். தொழிலாளர்களுக்கெல்லாம் முதலாளி தருகிறான் ஆயிரக்கணக்கான "டிப்ஸ்"" களை!! மாதிரிக்கு ஒன்று! அவனுடைய இறுதித் தூதர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "*உழைப்பாளியின் வியர்வை உலரும் முன் அவனுடைய கூலியைக் கொடுத்து விடுங்கள்!*" இதுதவிர, அனைத்துப் பிரச்னைகளுக்கும் இன்ன பல தீர்வுகளை படைத்தவன் தருகிறான். அவன் வடிவமைத்த நியதி பிரச்னைகளை நிரந்தரமாகத் தீர்க்கக்கூடியது. மனிதனால் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட சுயஇலாபக் கொள்கையல்ல அது. எந்தவொரு கூட்டத்தினருக்கும் எதிராக காழ்ப்புணர்வில் கரைகண்டதல்ல! மாறாக, அனைத்து வர்க்கத்தினரையும் நியாயமாக ஒரே குடையின் கீழ் கொண்டு வந்த சர்வதேச சமத்துவ சன்மார்க்க வாழ்க்கைத் தத்துவம். மனிதனை மனிதன், சுரண்டவோ ஏய்க்கவோ வழிவாய்க்காத படைத்தவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு வாழ்வுக்கட்டுமான வடிவம்!

ஆம் !!கம்யூனிஸம் மட்டுமல்ல, மனித சித்தாந்தங்கள் அனைத்தும் அழியக்கூடியதே! மாறாக, இறை நியதியின் உன்னதக் கொள்கை என்றும் நிலைக்கக்கூடியது, நிரந்தரமானது!! ஏனெனில், அது மனிதன் உருவாக்கிய 'ism'அல்ல..! படைத்தவன் காட்டிய ''mission "! அதுதான் இஸ்லாம்!

செம்படைத் தோழர்-தலைவர்களே! சற்று சிந்தியுங்கள். மனிதனை, மண்ணே திண்ணக் கூடியது என்றால், அவன் உருவாக்கிய சட்டங்களும் தத்துவங்களும் மட்டும் நிலைக்கக் கூடியதா என்ன??

உங்கள் பிரச்னைகள் அனைத்துக்கும் வடிகாலாக அமையக்கூடிய இஸ்லாத்தை சற்று உற்று நோக்குங்கள். அதன் கொள்கைகளை அலசுங்கள். உலகம் உங்கள் காலடியில்....!

- எம்

# நீங்கள் அறிந்த ஒரு விஷயத்தை இன்னும் புரிந்துகொள்ளுங்கள்!

இல்லத்தை அகல்விளக்காக்கும் மின்சாரம்!
அகிலத்துக்கே தூவுகின்றது செந்தூரம்!!
உன் சேமிப்பும் சிக்கனமும்
உன்னையும் நீ புகலிடம் யாசித்த
நாட்டையும் வளப்படுத்தும், பலப்படுத்தும்!




- குவைத் நாட்டின் இல்லங்களில் பயன்படுத்தப்படும் மொத்த மின்சாரத்தின் அளவில் 70% மின்சாரம் குளிர்சாதன இயந்திரம் (A/C) இயங்க செலவாகின்றது.

- “நியான்” விளக்குகளின் பயன்பாடு, அதிக வெளிச்சத்தைத் தருவதுடன், மின்சார செலவில் 80% சேமிக்கின்றது.

- குவைத்தில் செலவாகும் மின்சாரத்தின் அளவு, மொராக்கோ நாட்டின்* மொத்த மின்சார செலவை விட இருமடங்காகும்.

*குவைத்தின் மக்கள் தொகை 3 மில்லியன் மட்டுமே! அனால், மொராக்கோ நாட்டின் மொத்த மக்கள் தொகை 33 மில்லியன்.

ஆகவே, சிந்திப்பீர்...சிக்கனப்படுத்துவீர்...!!
மின்சாரம் அது தவிர்க்க இயலா ஆதாரம்!


IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
رحمة للعالمين...
Ext. 208 2444117
www.thelastingmiracle.com



உள்ளீடுகள் இன்றி தள்ளாடுகின்றதா
உங்கள் இலட்சிய வாழ்வு....?
வாழ்விலிருந்து விரண்டோட வைக்கின்றதா
உங்கள் எண்ணங்கள்...?
வாழ்வை உள்ளீடுகளின் உரங்களாக்குங்கள்...!
விதைக்க நாங்கள் தயார்...!




IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

Extn: 208 2444117

رحمة للعالمين...

www.ipc-kw.com